வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்

Email : news@eelanadu.lk மலர் : 04 19.05.2024 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 140 பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# போர் முடிந்து 15 வருடங்கள் கழிந்தும் நீதிக்கான காத்திருப்பு தொடர்கின்றது

## முள்ளிவாய்க்காலில் வைத்து தெரிவித்தார் சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர்

முல்லைத்தீவு, மே 19

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்கள் கழிந்தும் பாதிக்கப்பட்டவர்கள் நீதிக்காக தற்போதும் முள்ளிவாய்க்காலில் காத்திருக்கின்றனர் என சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னஸ் கலமார்ட் தெரிவித்தார்.

15



## தமிழர்களின் சுயாட்சியை அங்கீகரித்தல் வேண்டும்

முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் வலியுறுத்து

முல்லைத்தீவு, மே 19

தமிழர்கள் ஒரு தேச அங்கீகாரத்துக்குரியவர்கள் என்பதோடு அவர்களின் தனித்துவமான இறையாண்மையினதும் ஒருபோதும் பராதீனப்படுத்த இயலாத சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் சுயாட்சியை அங்கீகரிக்க வேண்டும் என்று முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

15

## இறுதிப்போரில் படுகொலையானோரை நேற்று முள்ளிவாய்க்காலில் நினைந்துருகினர் மக்கள்!

கண்களில் நீர் சொரிய சுடரேற்றி மலர் தூவி அஞ்சலி

முல்லைத்தீவு, மே 19

இறுதிப் போரில் கொத்துக் கொத்தாக தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் மண்ணில் பதினைந்தாவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்ணீர் விட்டு கதறியழ நடந்தது.

தமிழினப் படுகொலையின் 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் நேற்றுக் காலை 10:30 மணிக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு உணர்வுபூர்வமாக இடம்பெற்றன.

15



## கிழக்கு பல்கலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் பொலிஸார் அடாவடி!


மாணவர்களை மிரட்டி கலைக்க முயற்சி

மட்டக்களப்பு, மே. 19

கிழக்கு பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட வேளை அங்கு உட்பிரவேசித்த ஏறாவூர் பொலிஸார் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வை தடுக்கும் வகையில் இடையூறு ஏற்படுத்தினர்.

தமிழினப்படுகொலை வாரத்தின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று வடக்கு, கிழக்கில்

15



## தமிழர் சுயநிர்ணய உரிமை பெற அமெரிக்கா பணியாற்றவேண்டும்

அமெரிக்க காங்கிரஸில் பிரேரணை

நியூயோர்க், மே 19

தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்காக அமெரிக்கா பணியாற்ற வேண்டுமென வலியுறுத்தும் முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானமொன்று அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் விலே நிக்கலினால் அமெரிக்க காங்கிரஸில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்மானமானது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கும், நிலையான தீர்வை அடைந்து கொள்வதற்கும் பொதுஜன வாக்கெடுப்பொன்றை நடத்துமாறு வலியுறுத்துவதுடன், மக்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைக்கு ஆதரவளித்து,

15

## தமிழர்களுக்கு நீதி வழங்க தீர்க்கமான நிலைப்பாடு

பிரிட்டன் எம். பி. தங்கம் டெபனயர்

லண்டன், மே 19

ஆயுத மோதலின் இறுதி நாட்களில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற படுகொலைகளுக்கு நீதியும் பொறுப்புக்கூறலும் அவசியம் என பிரிட்டனின் தொழில்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தங்கம் டெபனயர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

15

## போர் என்பது வெற்றியல்ல! மனித குலத்தின் தோல்வி!!

சந்திரிகா குமாரதுங்க கருத்து

கொழும்பு, மே. 19

போர் என்பது வெற்றியல்ல அது நாட்டினதும் அல்லது மனித குலத்தினதும் தோல்வியாகும். 30 வருடகால யுத்தம் இழப்புக்களை மாத்திரமே மிகுதியாக்கியுள்ளது. வெறுப்புக்கு பதிலாக அன்பை வெளிப்படுத்துவோம் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நாட்டு மக்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

30 வருடகால யுத்தம் முடிவடைந்து நேற்று

15

## போரில் உயிர்நீத்தோர் நினைவாக வெள்ளவத்தையில் நினைவேந்தல்

குழப்பத்தை விளைவிக்க முயற்சி

கொழும்பு, மே. 19

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

கடந்த ஆண்டைப் போன்றே இம்முறையும் கொழும்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர்களால் கூட்டாக ஏற்பாடு

15




## கிளிநொச்சி இராணுவ பூங்காவுக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போராட்டம்!

கிளிநொச்சி, மே. 19

கிளிநொச்சி டிப்போச் சந்தியில் படையினரால் நிர்மாணிக்கப்படும் பூங்காவுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் சட்டத்தரணி சுகாஸ் தலைமையில் இடம்பெற்றது.

15




உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வுபூர்வமாக நடந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்முடன் வந்தால் பிரதமர் ஆகலாம்!

## சஜித்துக்கு ஐ.தே.க அழைப்பு

கொழும்பு, மே. 19

**ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்தால் சஜித்தின் அரசியல் வாழ்வு முடிந்துவிடும். எனவே, பிரதமர் வேட்பாளர் பதவியை ஏற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்படும் முடிவை அவர் தற்போது எடுக்க வேண்டும் என்று அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

சஜித் பிரேமதாசவை பிரதமர் வேட்பாளர் பதவியை ஏற்று ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுமாறு நான் மீண்டும் அழைப்பு விடுக்கின்றேன். ரணில் விக்கிரமசிங்கவின்கீழ் அவர் ஐந்து வருடங்கள் கற்றுக் கொண்டால் நிச்சயம் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் களமிறங்க முடியும்.

அவ்வாறு இல்லாமல் ஜனாதிபதி தேர்தலில் களமிறங்க முற்பட்டால் இறுதியில் தோல்வி ஏற்படும். இவ்வாறு இரு தடவைகள் ஜனாதிபதி தேர்தலில் தோல்வி அடைந்தால் அத்துடன் அவரின் அரசியல் வாழ்வும் முடிந்துவிடும். எனவே, சஜித்துக்கு மூளை இருந்தால் அவர் சாதகமான முடிவை எடுக்க வேண்டும்-என்றார். (அ)



# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மன்னாரில் நேற்று அனுஷ்டிப்பு


மன்னார், மே. 19

இறுதிப் போரில் உயிர் நீத்த உறவுகளை நினைவு கூர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்று சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் மன்னாரில் இடம் பெற்றது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் மன்னார் பஜார் பகுதியில் உள்ள தந்தை செல்வா சிலை பகுதியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுச்சுடரை அருட்தந்தை நவரட்னம் அடிகளார் ஏற்றி மாலை அணிவித்து நினைவேந்தலை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து மக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து மக்களுக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி வழங்கப்பட்டது. குறித்த நினைவேந்தல் நிகழ்வில் அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வர்த்தக நிலையங்கள் நேற்று பூட்டு

கிளிநொச்சி, மே. 19

முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வுக்கு கிளிநொச்சி வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டு உணர்வுபூர்வமாக ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உணவகங்கள், மருந்தகங்கள் தவிர்த்த ஏனைய வர்த்தக நிலையங்கள் நேற்று மூடப்பட்டன.

பொதுச்சந்தை உள்ளிட்ட அனைத்து வர்த்தக செயற்பாடுகளும் கைவிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)


# கிளிநொச்சியில் நேற்று நினைவேந்தல் நிகழ்வு

கிளிநொச்சி, மே. 19

யுத்தத்தால் இறந்த அனைத்து மக்களையும் நினைவு கூரும் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் இடம் பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட மக்கள் சமூக நிறுவனத்தின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வு நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம் பெற்றது.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் சர்வமத தலைவர்கள், அனைத்து இனத்தை சேர்ந்த மக்கள் கலந்து கொண்டனர்.



பொதுச்சுடர் ஏற்றப்பட்டதை தொடர்ந்து சுடர்கள் ஏற்றப்பட்டு அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது.

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தில் உயிரிழந்த அத்தனை உறவுகளையும் நினைவேந்தி அஞ்சலிக்கப்பட்டதுடன், சர்வ மத பிரார்த்தனையும் இடம் பெற்றது. (அ)

# தெல்லிப்பழை உணவகத்துக்கு சீல்!

யாழ்ப்பாணம், மே. 19

தெல்லிப்பளையில் சட்டவிரோத இறைச்சியை பயன்படுத்தி கொத்து தயாரித்த உணவகத்துக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதுடன், தண்டப் பணமும் விதிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பளை சந்தியிலுள்ள உணவகம் ஒன்றில் நேற்று முன்தினம் மாட்டு இறைச்சி கொத்து உண்ணச் சென்ற பத்திரிகையாளர் ஒருவர், இறைச்சி வித்தியாசமாக இருப்பதாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முறைப்பாடு செய்திருந்தார்.

பொதுச்சுகாதார பரிசோதகர்கள் உணவகத்தை ஆய்வு செய்தனர்.

உணவகம் சுகாதாரமற்ற முறையில் இயங்கியது. இறைச்சியை எங்கு வாங்கினோம் என்பதை உரிமையாளரால் தெளிவாக உறுதி செய்ய முடியவில்லை. சட்டவிரோதமாக வெட்டப்பட்ட மாட்டிறைச்சியாக இருக்கலாமென கருதப்பட்டது.

இதையடுத்து, உணவக உரிமையாளருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. உணவகத்துக்கு தற்காலிகமாக சீல் வைக்கப்பட்டுள்ளதுடன், ரூ.65,000 அபராதமும் விதிக்கப்பட்டது.

உணவகங்களில் இறைச்சி வாங்கும் போது, வாங்கிய இறைச்சியை உறுதி செய்யும் பற்றுச்சீட்டுக்களை வைத்திருப்பதன் மூலம் தேவையற்ற அசௌகரியங்களை தவிர்த்துக் கொள்ளலாமென சுகாதரத்துறையினர் சுட்டிக்காட்டினர்.

# இலங்கைக் கடற்படையில் 3,146 பேருக்கு பதவி உயர்வு

கொழும்பு, மே. 19

இலங்கை கடற்படையின் 3,146 பேருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள கடற்படை இந்த தகவலை உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு நேற்றுடன் 15 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

இந்நிலையில், ஜனாதிபதி மற்றும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா ஆகியோரின் ஒப்புதலுடன் 3,146 பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

சுமார் 30 வருடங்களாக நீடித்த பயங்கரவாதத்தை மனிதாபிமான நடவடிக்கையின் மூலம் வெற்றியடையச் செய்வதற்கு ஆயுதப் படைகள், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் வீரவீரர்கள் உயிர் தியாகம் செய்து ஈடு செய்ய முடியாத பங்களிப்பை ஆற்றியதாகவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# டயானா கையளிக்காத நான்கு வாகனங்கள்!

கொழும்பு, மே. 19

டயானா கமகே சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சராக இருந்தபோது அவருக்கு வழங்கப்பட்ட நான்கு வாகனங்கள் இதுவரை கையளிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 8ஆம் திகதி அந்த நான்கு வாகனங்களையும் ஒப்படைக்குமாறு சுற்றுலா அமைச்சு டயானா கமகேவிடம் தெரிவித்தபோதிலும் அவர் அந்த வாகனங்களை ஒப்படைக்கவில்லை எனவும் [illegible] ரக ஜீப், டபுள் கப் கார், பிராடோ ஜீப் மற்றும் நிசான் ரக கார் என்பவற்றை டயானா கமகே இதுவரை கையளிக்கவில்லை.

இதேவேளை, டபுள் கப் விபத்துக்குள்ளாகி தற்போது குருநாகல் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் அதானியின் காற்றாலை மின்திட்டம்: உயர் நீதிமன்றத்தில் சுற்றுச்சூழல் அமைப்பு மனு!

கொழும்பு, மே. 19

மன்னார் தீவில் காற்றாலை மின் திட்டத்தை இந்தியாவின் அதானி கிரீன் எனர்ஜி லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்குவதற்கான சமீபத்திய அமைச்சரவை முடிவை எதிர்த்து வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்துள்ளது.

வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன சார்பில் பிரசாந்தி மகிந்தரத்தே, ரேவன் வீரசிங்க மற்றும் ருக்ஷான் சேனாதீர ஆகியோர் ஆஜராகினர்.

இந்த திட்டம் தீவின் தனித்துவமான பல்லுயிர் மற்றும் குறிப்பாக மன்னார் தீவில் உள்ள அழகிய நிலப்பரப்புகளுக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது என்று வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் வாதிடுகிறது.

அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியினால் சில மாதங்களுக்கு முன்னர் ராம்சார் சதுப்பு நிலமாக பிரகடனப்படுத்தப்பட்ட அடம்ஸ் பாலம் தேசிய பூங்கா, விடத்தல்தீவு தேசிய பூங்கா மற்றும் சரணாலயம் போன்ற பல பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு தீவு தாயகமாக உள்ளது.

எண்ணற்ற வலசைப் பறவை இனங்களால் பயன்படுத்தப்படும் மத்திய ஆசியப் பறக்கும் பாதையின் தெற்கே மன்னார் உள்ளது, அதே நேரத்தில் பல உள்நாட்டு நீர் பறவைகள் மற்றும் வௌவால் இனங்கள் உள்ளன என்று அவர்கள் வாதிட்டனர்.

தேசிய சுற்றாடல் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் சர்வதேச மரபுகள் இரண்டையும் மீறி, பல்லுயிர் மையமாக மன்னார் தனித்துவமாக நிலைநிறுத்தப்படுவதைப் பாராட்டாமல், திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கும் முடிவு எடுக்கப்பட்டதாக வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் வாதிடுகிறது.

சதுப்புநிலங்கள், பவளப்பாறைகள் மற்றும் ஈரநிலங்கள் உள்ளிட்ட தீவின் பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகள், பிராந்தியத்தின் சுற்றுச்சூழல் சமநிலையை பராமரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. காற்றாலை மின் திட்டத்தின் கட்டுமானம் மற்றும் செயல்பாடு இந்த சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு மீள முடியாத சேதத்தை ஏற்படுத்தும் என்று கடுமையான அச்சுறுத்தல் இருப்பதாக அமைப்பு கூறுகிறது. (அ)




# காரைதீவில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!

காரைதீவு, மே. 19

காரைதீவில் நேற்று சனிக்கிழமை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடத்தப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ண பிள்ளை ஜெயசிறிலின் ஏற்பாட்டில் இந் நினைவேந்தல் நிகழ்த்தப்பட்டது.

நிகழ்வில் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களான க.சிவலிங்கம், பொ.செல்வநாயகம், திருமதி சுமித்ரா, காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் த. மோகனதாஸ், ஆலய தர்மகர்த்தா த. சிவகுமார், சமூக செயற்பாட்டாளர் வினாயகம் விமலநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

உறவுகளை நினைவு கூர்ந்து சுடரேற்றி அகவணக்கம் செய்யப்பட்டது. (அ)

# ஜனாதிபதி இந்தோனேசியா பயணம்!

கொழும்பு, மே. 19

இந்தோனேசியாவின் பாலி நகரில் நடைபெறும் 10 ஆவது உலக நீர் மாநாட்டின் உயர்மட்டக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று காலை இந்தோனேசியா பயணமானார்.

இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி இந்த உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்கிறார்.

'கூட்டு செழுமைக்கான நீர்' என்ற தொனிப்பொருளில் 10 ஆவது உலக நீர் மாநாடு நேற்று முதல் 20 வரை இந்தோனேசியாவின் பாலி நகரில் நடைபெறவுள்ளது.

இதேவேளை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர்வரும் மே மாதம் 20 ஆம் திகதி மாநாட்டில் விசேட உரையாற்றவுள்ளார்.

மேலும் ஜனாதிபதி ரணில் தனது இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, இந்தோனேசிய ஜனாதிபதி உள்ளிட்ட அந்நாட்டின் பல உயர் மட்ட பிரதிநிதிகளுடன் இருதரப்பு கலந்துரையாடல்களிலும் ஈடுபடவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# வைத்தியர், மனைவி மீது கத்திக்குத்து தாக்குதல்!

கொழும்பு, மே. 19

புத்தளம் - சிலாபம் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வைத்தியர் மற்றும் மனைவி மீது கத்திக்குத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் இடம்பெற்ற விருந்தில் ஏற்பட்ட வாக்குவாதத்தினால் கத்திக் குத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது பலத்த காயங்களுக்குள்ளான வைத்தியரும் அவரது மனைவியும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைத்தியராகக் கடமையாற்றும் 33 வயதான சாமுவேல் ஜோன்சன் மற்றும் அவரது 20 வயது மனைவி சுப்ரமணியம் பிரித்திகா ஆகியோரே இந்த சம்பவத்தில் காயமடைந்துள்ளனர்.

வைத்தியரின் வீட்டில் இடம்பெற்ற விருந்துபசாரத்தின் போது அங்கிருந்த ஒருவரே கத்திக்குத்து தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)


# முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளுக்காகப் பிதிர்க்கடன்

முல்லைத்தீவு, மே. 19

யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்களின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் பிதிர்க்கடன்கள் நிறைவேற்றலும் நேற்று இடம்பெற்றது.

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளுக்கான பிதிர்க்கடன் செய்யும் வழிபாடும், ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனையும் நேற்று காலை 7.30 மணி முதல் முள்ளிவாய்க்கால் கப்பல் வீதியில் உள்ள கடற்கரை பகுதியில் விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் நடைபெற்றது.

குறித்த பிதிர்க்கடன் வழிபாட்டில் உறவுகளை இழந்த



பெரும்திரளான மக்கள் வருகை தந்து இறந்தவர்களின் பெயர் கூறி பிதிர்க் கடனை நிறைவேற்றினர். (அ)

# 3 உணவகங்களுக்கு எதிராக அபராதம்

யாழ்ப்பாணம், மே. 19

இணுவில் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் உணவகங்களை நடத்திய உணவாக உரிமையாளர் மூவரை கடுமையாக எச்சரித்த நீதிமன்றம், அவர்களுக்கு 60 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதித்துள்ளது.

இணுவில் பகுதிக்கான பொது சுகாதார பரிசோதகர் சி. சிவானுஜன் இணுவில் பகுதியில் உள்ள உணவகங்களில் திடீர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டார்.

அதன்போது மூன்று உணவகங்கள் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த நிலையில், குறித்த உணவக உரிமையாளர்களுக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தார்.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளை தம் மீதான குற்றச்சாட்டுக்களை உரிமையாளர்கள் ஏற்றுக்கொண்டதை அடுத்து, அவர்களை கடுமையாக எச்சரித்த மன்று , 25 ஆயிரம் , 15 ஆயிரம் மற்றும் 20 ஆயிரம் ரூபாய் என மூவருக்கும் 60 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்துள்ளது. (அ)

# பல்கலை. மாணவிக்குத் தொல்லை 6 இளைஞர்கள் பொலிஸாரால் கைது

ஹற்றன், மே 19

ரயிலில் பயணித்த பல்கலைக்கழக மாணவியொருவருக்கு தொல்லை கொடுத்ததாகக் கூறப்படும் 6 இளைஞர்கள் ஹற்றன் ரயில் நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த ரயிலிலிருந்த 6 இளைஞர்கள் அதே ரயிலில் பயணித்த பல்கலைக்கழக மாணவியொருவருக்கு பலமுறை தொல்லை கொடுத்ததாக பொலிஸார் கூறினர்.

இந்த நிலையில், பாதிக்கப்பட்ட பல்கலை. மாணவி இது தொடர்பில் தனது பெற்றோரிடம் தெரிவித்ததையடுத்து ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து சந்தேகநபர்கள் ஹற்றன் ரயில் நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பைச் சேர்ந்த 20 முதல் 30 வயதுக்குட்பட்ட 6 இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் சிவனொளிபாத மலைக்கு யாத்திரை செல்வதற்காக வந்ததாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# 2 மாதங்களில் மின் கட்டணம் குறையும்!

கொழும்பு, மே. 19

எதிர்வரும் இரண்டு மாதங்களில் மின்சார கட்டணத்தை குறைக்க முடியும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொலன்னாவ பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உமா ஓயா மின் உற்பத்தி நிலையத்தின் ஊடாக 120 மெகாவோட் கூடுதல் மின்சாரம் தேசிய அமைப்புக்கு கிடைத்துள்ளதுடன், இதன் ஊடாக கிடைத்த நேரடி மின்சாரத்தின் பலன்களை மக்களுக்கு வழங்க முடியும் என பிரதமர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, மின்சார கட்டணத்தை குறைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 19.05.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 06
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தென்னிலங்கை புரிந்துகொள்ள வேண்டியது

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் என்னும் பெயரில் இயங்கி வரும் அமைப்பு, அமெரிக்காவின் உதவியுடன், ஈழவாதிகள் நாட்டைப் பிரிக்க முற்படுகின்றார்கள் என்றவாறு ஒரு கதையை கூறியிருக்கின்றது. அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர், ஈழத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பில் சுதந்திர வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று தெரிவித்திருப்பதை மேற்கோள்காட்டியே, மேற்படி அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருக்கின்றது.

ஓர் இறைமையுள்ள நாட்டில் பொதுசன வாக்கெடுப்பை அரசாங்கத்தின் அனுமதியின்றி நடத்தமுடியாது - ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வையில், குறித்த நாட்டின் அனுமதியுடன்தான் அவ்வாறான வாக்கெடுப்பை நடத்த முடியும். இந்த உண்மையானது, குறித்த தேசப்பற்றுள்ளவர்களுக்கும் தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை - ஆனால், தங்களின் இனவாத மூளையைத் திருத்திக்கொள்ள மாட்டோம் என்று அடம்பிடிக்கும் கூட்டமொன்று, தமிழ் மக்களை இரண்டாம் தரமாக்கும் முயற்சியில் - இறுதியில், ஒட்டுமொத்த இலங்கைத் தீவையும் வங்குரோத்து நிலைக்குள் தள்ளியிருக்கின்றது என்பதே உண்மையாகும். இதனை இனியும் சிங்கள தேசம் புரிந்து கொள்ளவில்லையாயின், அவர்களை கௌதம புத்தர்தான் காப்பாற்ற வேண்டும்.

முதலில் தேசப்பற்று என்றால் என்ன? எப்போதும் தமிழ் மக்களை இரண்டாம் தரமாக்க முயற்சிப்பதுதான் தேசப்பற்றா? இவ்வாறானவர்கள் ஒரு விடயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும் - ஏன் இவ்வாறான கோரிக்கைகள் எழுகின்றன? அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் இவ்வாறு கூறுவதற்கு யார் காரணம்?

யுத்தம் முடிவுற்று பதினைந்து வருடங்களாகிவிட்டன. இந்தப் பதினைந்து வருடங்களில் தமிழ் மக்களின் மனக்குறைகளை, அரசியல் கோரிக்கைகளை ஆகக் குறைந்தளவு கூட, தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கங்களினால் முன்னெடுக்க முடியவில்லை. அவ்வாறான மனக்குறைகளை போக்குவதற்குப் பதிலாக, அந்த மனக்குறைகள் நியாயமானது என்பதை தமிழ் மக்கள் இன்னும் ஆழமாகப் புரிந்து கொள்ளக் கூடியவாறான செயல்பாடுகளில்தானே,

ஆட்சியாளர்கள் முனைப்பு காண்பித்திருக்கின்றனர். இறந்த தங்களின் உறவுகளை நினைவு கூர்ந்து, சிரட்டையில் கஞ்சி அருந்துவதைக் கண்டே, நீங்கள் ஏன் அஞ்சுகின்றீர்கள்? ஆட்சியாளர்கள் சரியான பாதையில் பயணித்தால், ஏன் கஞ்சியை பார்த்து அஞ்ச வேண்டும்? இப்படியான காரணங்களால்தானே, இவ்வாறான கோரிக்கைகள் எழுகின்றன.

தமிழ் மக்கள் மத்தியில் இணைந்து வாழவேண்டும் என்னும் எண்ணத்தை ஏற்படுத்த வேண்டியவர்கள் யார்?, அந்தப் பொறுப்பு யாருக்குரியது? பெரும்பான்மை மக்கள் மத்தியிலிருந்தல்லவா இந்தக் கரிசனை வெளிப்பட்டிருக்க வேண்டும். உங்கள் மத்தியிலிருந்து ஆக்கபூர்வமான விடயங்கள் எதுவும் கடந்த பதினைந்து வருடங்களில் இடம்பெறாத காரணத்தினால்தானே, அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர்கள் இவ்வாறு பேச வேண்டியேற்படுகின்றது. புலம்பெயர் சமூகத்திலிருப்பவர்கள் இவ்வாறான விடயங்களில் நாட்டம் காண்பிக்க வேண்டியிருக்கின்றது. பந்து இப்போது தென்னிலங்கையிடம் இருக்கின்றதே தவிர, அது தமிழ் மக்களிடம் இல்லை. எனவே தேசப்பற்று என்னும் பேரில் சிங்கள மக்களை ஏமாற்றும் செயல்பாடுகளை விடுத்து, தமிழ் மக்களை சமபங்காளியாகக் கொண்டு, இலங்கையை கட்டியெழுப்புவது தொடர்பில் கவனம் செலுத்துங்கள்.

# காலவரையின்றி பிற்போடப்பட்ட நாகை-காங்கேசன் கப்பல் சேவை

கொழும்பு, மே. 19

நாகப்பட்டினத்திலிருந்து காங்கேசன்துறை வரையான கப்பல் சேவை ஆரம்பிக்கும் திகதி மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக குறித்த கப்பல் சேவையை கடந்த 13 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த நிலையில், சில சட்டரீதியான அனுமதிகள் உள்ளிட்ட காரணங்களால் தாமதம் ஏற்பட்டதுடன் மே 19 வரை அந்த செயற்பாடு பிற்போடப்பட்டநிலையில் தற்போது மறு அறிவித்தல் வ்ரை பிற்போடப்பட்டுள்ளது.

பழைய கப்பல் என்பதால் சில பாதுகாப்பு குறைபாடுகள் இருப்பதாகவும், அதனை சரி செய்தால் மட்டுமே உரிய அனுமதி வழங்கப்படும் என தகவல் வெளியாகியுள்ளது.

டிக்கெட் முன்பதிவு செய்தவர்கள், கட்டணத்தை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என படகுசேவையின் தனியார் நிறுவனத்தின் முகாமைத்துவம் அறிவித்துள்ளது.

செலுத்திய கட்டணத்தினை முழுமையாக மீளப் பெற விரும்பினால், customer.care@sailindsri.com என்ற மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொண்டு செலுத்திய கட்டணத்தினை மீளப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சவப்பெட்டிகளை தாங்கியவாறு முள்ளிவாய்க்கால் சென்ற ஊர்தி




கிளிநொச்சி, மே. 19

முள்ளிவாய்க்காலில் கொலை செய்யப்பட்ட மக்களுக்கு நீதி கோரி பதாதைகள், காட்சிகள் அமைக்கப்பட்ட ஊர்தி கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டு சென்றது.

முள்ளிவாய்க்காலை நோக்கி அந்த ஊர்தி சென்றது.

குறித்த ஊர்தியை பொலிசார் கடுமையாக சோதனைக் குட்படுத் தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாராளுமன்றம் 22ஆம் திகதி கூடும்

கொழும்பு, மே. 19

பாராளுமன்றம் எதிர்வரும் 22ஆம் திகதி மீண்டும் கூடவுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய, அன்றைய தினம் முற்பகல் 9.30 அளவில் பாராளுமன்றம் கூடவுள்ளதுடன் கடந்த 14ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிட்ட "பொருளாதார நிலைமாற்றம்" மற்றும் "பகிரங்க நிதிசார் முகாமைத்துவம்" ஆகிய இரண்டு சட்ட மூலங்களும் முதலாவது வாசிப்புக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இதனையடுத்து முற்பகல் 9.45 முதல் பிற்பகல் 5.30 வரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தை நடத்துவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (அ)

# மீன்பிடி படகொன்று கப்பலில் மோதியது!

## ஒருவர் உயிரிழப்பு ஒருவரை காணவில்லை

மட்டக்களப்பு, மே. 19

வாழைச்சேனை கடற்பரப்பில் மீன்பிடி படகொன்று விபத்திற்குள்ளானதில் மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த நீண்டநாள் மீன்பிடிப் படகு, அதிக மழையுடனான வானிலையினால் கப்பல் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.


வாழைச்சேனை மீன்பிடி துறைமுகத்தில் இருந்து சென்ற குறித்த படகில் ஐந்து மீனவர்கள் பயணித்துள்ளனர்.

இதன்போது, இடம்பெற்ற விபத்தில் நிந்தவூரை சேர்ந்த 47 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார்.

விபத்தின் போது 60 வயதான மீனவர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், விபத்தில் காயமடைந்த மீனவர் ஒருவர் திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே செல்லும் இந்தப் பாதை...?

கே.வி.கே. பெருமாள்

இன்று மக்களின் பொழுதுபோக்கு அம்சங்களில் ஒன்றாக யூட்யூப் மாறியிருக்கிறது. அதைப் பயன்படுத்தி பணம் சம்பாதிப்பவர்கள் நாளுக்கு நாள் பெருகி வருகிறார்கள். சற்றும் மனசாட்சியின்றி, பிரபலமானவர்களைப் பற்றி அவதூறு பரப்புவதும், செய்திகளைத் திரித்து வெளியிடுவதும் வாடிக்கையாகிவிட்டன.

ஒருகாலத்தில் வெள்ளித்திரையிலும், பின்னர் சின்னத் திரையிலும் பிரகாசித்த ஒருவர், சமீப காலமாக இலக்கியத் துறையில் குறிப்பிடத்தக்க அளவுக்கு முத்திரை பதித்து வருகிறார்.

பொதுவாக அவர் பங்கேற்கும் விழாக்களில் தனக்கு சால்வை அணிவிப்பதைத் தவிர்க்கச் சொல்வார். ஒரு விழாவில் அவரது நெருங்கிய நண்பர் ஒருவரே சால்வை அணிவிக்க வந்தபோது அதனை வாங்க மறுத்து, தன்னுடைய நண்பர் என்கிற உரிமையோடு அவரிடம் கோபப்பட்டார். உடனே, சமூக வலைதளங்கள் இதனை ஊதிப் பெரிதாக்கி, இது நியாயமா? தகுமா? என்றெல்லாம் கேள்வி கேட்கத் தொடங்கிவிட்டார்கள். தன்னுடைய நண்பரிடம் கோபப்பட அவருக்கு உரிமை உண்டு. அவரது நண்பரே தனது தவறை உணர்ந்து கொண்ட பிறகு, மற்றவர்கள் ஏன் இதில் வீணாகத் தலையிட்டு, அவதூறு செய்ய வேண்டும்?

வலைதளங்களில் திரைப்பட நடிகைகளைப் பற்றி முகம் சுளிக்கிற அளவுக்குச் சிலர் பேசுகிறார்கள். நடிகையாக இருப்பதால் மட்டுமே ஒரு பெண்ணைப் பற்றி என்ன வேண்டுமானாலும் பேசலாம் என்பது எப்படி நியாயமாகும்? ஒருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையை விமர்சிப்பது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. பெரும்பாலும், இது போன்ற அவதூறுகளை எதிர்த்து நடிகைகள் காவல் நிலையங்களுக்கோ, நீதிமன்றங்களுக்கோ செல்வதற்குத் தயங்குகிறார்கள். புகார் கொடுப்பதால் உடனே நீதி கிடைக்காது என்பது மட்டுமல்லாமல், ஏற்கெனவே பரப்பப்பட்ட அவதூறுகள் இன்னும் பல்லாயிரம் பேரைச் சென்றடைவதற்கு அது



வாய்ப்பாகி விடும் என்று அஞ்சுகிறார்கள்.

எனவே, இதில் அரசு தலையிட்டு, இதுபோன்ற அவதூறு காணொளிகளைத் தடை செய்வதோடு உரிய நபர்கள் மீது நடவடிக்கையும் எடுக்க வேண்டும்.

முன்பு ஒருசில செய்தித் தாள்கள் மட்டுமே வெளி வந்து கொண்டிருந்தன. வானொலி மட்டுமே நமக்கான விரைவுச் செய்திக்கான களமாக இருந்தது. வானொலியும் அரசின் பொறுப்பிலேயே இருந்தது. பின்னர் அரசு தொலைக்காட்சி மட்டும் வந்தது. அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும்போது ஒரு குறிப்பிட்ட செய்தியை வெளியிடும் முன்பு ஊழியர்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டிய நிர்பந்தம் இருந்தது. எனவே, அப்போதெல்லாம் செய்திகளில் உண்மைத் தன்மை இருந்தது. ஊடகங்களும் செயற்கைத் தொழில்நுட்பமும் பெருகிவிட்ட இன்றைய காலகட்டத்தில் கண்ணில் படுகிற, காதில் கேட்கிற செய்திகளில் உண்மையையும் பொய்யையும் பிரித்தெடுக்க முடியாமல் உலகமே திணறி வருகிறது.

'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற பாரதியின் வார்த் தைகள் ஊடகத் துறைக்கும் பொருந்தும்தானே!

மின்னஞ்சல், புலனம், செயலிகள், முகநூல், வலையொளி, கணக்கிலடங்கா வலைதளங்கள் மூலமாக நடைபெறும் குற்றங்கள் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன. புதிய தொழில் நுட்பங்கள் மூலமாகப் பெருகி வரும் குற்றங்களைக் கட்டுப்படுத்த முடியாமல் காவல் துறை திணறி வருகிறது. புற்றீசல்கள் போல தினமும் பெருகி வரும் புதுப்புது செயலிகள் சமாளிக்க முடியாத அளவுக்கு அரசுக்குச் சவால்களாக இருக்கின்றன.

மனிதர்களிடம் பெருகி வரும் பணத்தாசை, பாலுணர்வுக்கு வடிகால் தேடும் வக்கிர குணம், அடுத்தவர்களைத் துன்புறுத்தி மகிழும் மனப்பான்மை (சேடிஸம்) போன்ற பல காரணங்கள் குற்றங்கள் பெருகுவதற்குக் காரணிகளாகின்றன.

இருப்பதை இல்லாததாகவும், இல்லாததை இருப்பதாகவும் ஆக்கும் 'ஃபேக்' (போலி) 'டீப் ஃபேக்' (ஆழமான போலி) போன்ற வார்த்தைகள் நம்மை அச்சத்தில் ஆழ்த்துகின்றன.

ஒருமுறை உலகின் பிரபலமானவர்கள் பட்டியலில், தனது பெயருக்குப் பின்னல் மகாத்மா காந்தியின் பெயர் இடம் பெற்றிருப்பதைப் பார்த்த அறிவியல் அறிஞர் ஐன்ஸ்டீன், 'மகாத்மா காந்தி பின்பற்றும் அகிம்சை ஆக்கபூர்வமானது. நான் சார்ந்திருக்கும் அறிவியலால் ஆக்கவும் முடியும். அழிக்கவும் முடியும். எனவே, எனது பெயருக்கு மேல் மகாத்மா காந்தியின் பெயர்தான் இடம் பெற வேண்டும்' என்றார். எவ்வளவு தீர்க்கமான வர்த் தைகள் அவை!

இன்று திரும்பிய திசையெல்லாம் போர் மேகங்கள்... எல்லா நாடுகளும் விரைந்து அழிக்கிற ஏவுகணைகளைப் போட்டி போட்டுக் கொண்டு வாங்கிக் குவிக்கின்றன. எப்போது என்ன நடக்குமோ என்று உலகமே நடுங்கிக் கிடக்கிறது.

இன்றைய அறிவியல் வளர்ச்சி, ஆக்கத்தைவிட, அழிவுக்கு அதிகம் வழிவகுக்கிறதோ என்று அஞ்சத் தோன்றுகிறது. எங்கே செல்லும் இந்தப் பாதை...?

## இந்தவார ராசிபலன் 19.05.2024 - 25.05.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - வைகாசி 06

நல்ல நேரம்: 7.30 - 08.30 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : துவாதசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் எதிர்பார்த்தபடி தனவரவு அதிகரிக்கும். தொழில் நிலை அமோகமாக அபிவிருத்தி அடையும். படிப்பிலும், பணியில் முயற்சி செய்தால் முன்னேற்றம் இருக்கும். இதுவரை தீராமல் இருந்து வந்த பிரச்சனைகள் அனைத்தும் பெரியவர்களால் தீர்த்து வைக்கப்படும். புதிய சொத்துக்கள், வீடு வாங்க நல்ல தருணம். பிறருக்கு ஜாமீன் கொடுப்பது, கூட்டுக் கையெழுத்துப் போடுவதோ கூடாது. வாழ்க்கையில் சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் கொடுத்த கடனை திரும்பப் பெறுவதில் சிக்கல்கள் எழாது. சுலபமாக வசூலாகிவிடும். தம்பதிகளுக்கு இடையே கோபம் மறைந்து சமாதானமாக இணைந்து பேரின்பம் அடைவர். மிகவும் அன்பு காட்டும் பெண்களின் ஆதரவால் லாபம் ஏற்படும். குழந்தைகளின் சுட்டித்தனம் மற்றும் சேட்டைகளை கண்டு மனம் மகிழ்ச்சி அடையும். தன, தான்ய விருத்தி ஏற்பட்டு விவசாயிகள் இலாபம் அடைவர். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி ஏற்படும். அதிகாரத்தில் உள்ளவர்கள் ஆதரவால் பணியில் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் கடவுளுக்கான பூஜைகளை கருத்தோடு செய்வார்கள். தொழிலில் முன்னேற்றம் பெற உங்களுக்கு பெரியவர்கள் ஆசியும், மேலதிகாரிகளின் ஆதரவு ஏற்படும். புதிய நண்பர்களால் ஆதாயங்கள் ஏற்படும். பயணத்தில் துன்பமும், கடன் கொடுத்தவர்களின் கெடுபிடி, சகோதரர் விரோதம், அரசு வகைத் தொல்லை ஆகியவை ஏற்படும். சிலருக்கு இடமாற்றங்கள் ஏற்படலாம். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். மனை இவற்றால் இலாபம் ஏற்படும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் பெறுவதில் எவ்விதச் சிக்கல்களும் ஏற்படாது. வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர். பெயரும், புகழும் ஓங்கும். அறிவுத்திறனும் கூடும். சிலர் பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்லதே நடக்கும். பகையும் ஏற்படலாம்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் எதிர்கால தொழில் முன்னேற்றங்களை கருத்தில் கொண்டு விரிவாக்க திட்டங்கள் சிலவற்றில் முதலீடுகள் செய்வது ஏற்றம் தரும். அரசு ஊழியர்களுக்கு தலைமைப் பதவி கிடைக்கும். பணிபுரியும் பெண்கள் வாகனங்களில் செல்கையில் வேகத்தை குறைத்துக் கவனமுடன் செல்லுதல் அவசியம். சிலருக்கு எதிர்பார்த்த அரசு உதவிகள் தாமதமாகலாம். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் உடன் பிறந்தவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். வீண் மனஸ்தாபங்கள் தவிர்த்தால் வீட்டில் அமைதி நிலவும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். பிறரால் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேரலாம். பணிபுரியும் பெண்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் எதிர்பார்த்த தனவரவுகள் எதிர்பார்த்தபடி கிடைக்கும். தொழிலில் புதிய திருப்பங்கள் ஏற்பட்டு ஆதாயம் கூடும். ருசியான உணவு வகைகள் ருசித்து மகிழ்வீர்கள். உங்கள் அயராத உழைப்பால் அதிகாரிகளிடம் நல்ல பெயர் எடுத்து, அதுவே உங்கள் பணிவுயர்வுக்குப் பாதையாக அமையும். சிலருக்கு அவர்களின் சுறுசுறுப்பற்ற தன்மையால் காரியத் தடைகள் ஏற்படலாம். புதிய நண்பர்கள் சேர்க்கையால் உற்சாகம் பிறக்கும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு நல்ல முடிவு வரும். இதுவரை வசூலாகாத கடன் பாக்கிகள் சிரமமின்றி வசூலாகும். புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் பல வழிகளிலும் தனவரவு ஏற்படும். அதன் காரணமாக உற்சாகம் மிக்க வாரமாக அமையும். பிள்ளைப் பேறு உண்டாகும். புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகும். சுக சௌகரியங்கள் அதிகரிக்கும். இனிய செய்தி கேட்டு இல்லத்தில் உள்ளவர் மகிழ்வர். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் பூமி வீடு மூலம் இலாபம் ஏற்பட்டாலும், தேவையற்ற வீண் விரயங்கள் ஏற்படலாம். மனைவியின் கடமை உணர்வுடன் கூடிய பணிவிடை மகிழ்ச்சி தரும். மக்கள் மத்தியில் மதிப்பும், கௌரவம் உயரும். சோம்பேறித்தனம் அதிகரிக்கும். சதாசர்வ காலமும் பெண்களுக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு, அதன் காரணமாக குடும்ப முன்னேற்றம் ஏற்படும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி கூடும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் நீண்ட நாட்களாக வராத உறவினர்கள் வந்து இன்ப அதிர்ச்சி தருவார். புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் புதிய இயந்திரங்கள் பயன்படுத்தி உற்பத்தியை பெருக்கி, இலாபத்தை அதிகரிப்பார்கள். எழுத்தாளர்களின் புதிய நூல்கள் வெளிவரும். மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு கடின உழைப்பு தேவைப்படும். வீட்டில் நவீன உபகரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். வியாபார சம்பந்தமான வெளிநாட்டுப் பயணங்கள் இலாபம் தரும். இதுவரை கடினமாக இருந்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் பொருளாதார நிலை ஏற்ற இறக்கமாக இருந்தாலும் நடைமுறை வாழ்க்கையில் பாதிப்பு இருக்காது. தேவையற்ற ஆடம்பரச் செலவுகளை குறைத்து கடன் தொல்லைகளில் இருந்து மீளலாம். அவரவர் தகுதிக்கு ஏற்ப பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். தொழில் கூட்டாளிகளின் பூரண ஒத்துழைப்பு இருக்குமாதலால் உற்பத்தி பெருகி உன்னத நிலையை அடைவீர்கள். நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். இந்த வாரம் உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் வெற்றியின் மகிழ்ச்சியை அனுபவிப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர்ந்தோர் தொடர்பிலான விம்பம் எதனை நினைவுபடுத்துகிறது?

நியூசிலாந்து சிற்சபேசன்

அரசியல்கட்சிகளிடையே, முன்னெப்போதிலுமே இல்லாத அளவுகளிலே, பிளவுகள் தொடர்ச்சியாக அதிகரிக்கின்றன. அதனால் நீதிமன்றப் படிக்கட்டுகளில் ஏறி இறங்குகின்றன. அதேவேளையில், தேர்தல் பரபரப்புக்களும் ஆரம்பமாகிவிட்டன. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலேயே தமிழர் தரப்பின் கவனத்தைக் காணமுடிகின்றது. தமிழ் பொதுவேட்பாளர் விவகாரமே பரவலாகப் பேசப்படுகின்றது. இத்தகையதொரு காலகட்டத்திலே, புலம்பெயர்ந்தோர் மீதும் கவனம் திரும்பியிருக்கின்றது.

தற்காலத்திலே "அடிமுடி" காணமுடியாத விஷயம் என ஒன்றைச் சொல்ல வேண்டுமெனில், அஃது "புலம்பெயர்ந்தோர்" தொடர்பானதேயாகும். புலம்பெயர்ந்தோர் தொடர்பில், நேரெதிர் தன்மையதான அபிப்பிராயங்களையே தாயகச் சமூகத்திலே காணமுடிகின்றது.

நெருக்கடியான யுத்தகாலம், அதன் பின்னரான மீட்சி, கோவிட்பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி போன்ற சவால்களின்போது புலம்பெயர்ந்தோர் தோள் கொடுத்தனர். அதுதொடர்பில், தாயகத்திலேயும் புளகாங்கிதமுண்டு. அதேவேளையில், புலம்பெயர்ந்தோரிடமிருந்து வரக்கூடிய அபிப்பிராயம் தொடர்பில் தாயகத்தில் காணப்படுகின்ற பாராமுகமும் யதார்த்தமாகும்.

இத்தகையதொரு பின்னணியிலேயே, ஜனாதிபதித் தேர்தலை நோக்கிய தமிழ் பொதுவேட்பாளர் கருத்துருவாக்கத்தில் புலம்பெயர்ந்தோரின் பங்களிப்பு வேண்டும் என்பதான குரல்களையும் கேட்க முடிகின்றது.

அதற்கு முன்னுதாரணமாக, கோத்தபாயவின் தேர்தல் வெற்றியிலே வெளிநாடுவாழ் சிங்கள மக்களின் கருத்துருவாக்கப் பங்களிப்பு சுட்டிக்காட்டப்படுகின்றது. அதேபோன்று, அனுரகுமார திசநாயக்காவின் நகர்வுகளும் எடுத்துக் காட்டப்படுகின்றன.

தாயகக் கருத்துருவாக்கத்தில், புலம்பெயர்ந்தோரின் பங்களிப்பு சாதகமான விளைவுகளை ஏற்படுத்துமா என்ற கேள்விக்கான பதில் சிக்கலானது. பேச்சுவழக்கில் சொல்வதெனில், இரண்டு கைகளுமே சேர்ந்து தட்டாவிட்டால் சத்தம் ஏற்படாது. அதேதோரணையில் சொன்னால், தாயகத்திலுள்ளோரும் புலம்பெயர்ந்தோரும் சேர்ந்து இயங்குவதற்குத் தயாராக வில்லை. இருதரப்பிடையேயும் புரிந்துணர்வு கிடையாது. ஒருதரப்பின் கருத்தை, மற்றைய தரப்புக் கவனிக்கக்கூடிய இயல்பான சூழல்கூட கிடையாது.

புலம்பெயர்வு ஆரம்பமாகி நான்கு தசாப்தங்கள் கடந்துவிட்டன. ஆனாலும் கூட, தாயகத் தமிழரும் புலம்பெயர் தமிழரும் இயல்பான உறவுநிலையை வளர்த்துக்கொள்ளவில்லை. இரண்டு தரப்பினரிடையேயான பரஸ்பர புரிதல் கானல்நீராகவேயுள்ளது.

இத்தகையதொரு நிலை ஏன் ஏற்பட்டது என்ற கேள்விக்கான பதில் இடியப்பச் சிக்கல்போன்றதாகும்.

தாயகத்திலே யுத்தம் ஏற்படுத்திய தாக்கம் கொடியது. அதற்கு ஒப்பீடு கிடையாது. அதேவேளையில், வலிகளையும் வேதனைகளையும் சுமந்ததே புலம்பெயர்வு என்பதுவும் யதார்த்தமாகும். அதுதொடர்பில், தாயகத்தில் உள்ளோருடைய புரிதல் எத்தகையது என்பது பெரிய கேள்வியாகும்.

புலம்பெயர்வு இலேசானது அல்ல. புலம்பெயர்வின் வழித்தடம் தெளிவற்றது. மிகக்கடினமான வழிமுறைகளிலேயே புதியபுலம் கண்டடையப்படுகின்றது. மாறுபட்ட சுவாத்தியங்களை எதிர்கொள்ளவேண்டும்.




புதியவாழ்க்கையைப் பூஜ்ஜியத்திலிருந்து ஆரம்பிக்கவேண்டும். குடும்ப உறவுகளிலிருந்து பிரியவேண்டும். வெவ்வேறு தேசங்களில் வாழவேண்டும். உறவுகளின் இன்பதுன்பங்களில் பங்குகொள்ளமுடியாது என்பதாகப் புலம்பெயர்வின் வலிகள் தொடர்கதையாகின்றன.

> **சமூகமாகத் திரட்சியடையவே திணறுகின்ற மக்கள்கூட்டம் தொடர்பில், தாயகத்தில் கட்டமைகின்ற "புலம்பெயர்ந்தோர்" தொடர்பிலான விம்பம், வயல்வெளிப் பொம்மையையே நினைவுபடுத்துகின்றது.**

ஒவ்வொருவருடைய அனுபவமும் வேறுபட்டது. பெருவெட்டில் சொல்வதெனில். புலம்பெயர்விலேயும் விரலுக்கு மிஞ்சிய வீக்கமும் வலியும் உண்டு.

காலவோட்டத்திலே, புதியபுலங்களிலே வாழ்வதற்குப் பழகிக்கொள்கின்றனர். இருப்பிடம், தொழில் போன்ற அடிப்படைகள் பூர்த்தியாகின்றன. புதியதலைமுறை தலையெடுக்கின்றது. வாழும் சூழலுடன் இயல்பான இணைவு புதியதலைமுறைக்கு வரமாகின்றது. அதனால் கல்வி, புலமை, தொழில் என முன்னோக்கிய பாய்ச்சல் சாத்தியமாகின்றது. அந்த வகையிலே, இயல்பான வாழ்க்கைக்கான உத்தரவாதம் புலம்பெயர்ந்தோருக்குக் கிடைக்கின்றது.

புலம்பெயர்ந்தோரிடையே, தாயகம் தொடர்பான ஆத்மார்த்தமான அக்கறையைக் கொண்டவர்கள் உள்ளனர். ஆனால், அதிலே கணிசமானோர் பார்வையாளர்களாகவே கடந்து விடுகின்றனர். ஏதோவொரு வகையிலே செயற்பாட்டாளர்களாக உள்ளோரின் எண்ணிக்கை குறைவானதாகும். அதிலேகூட தொய்வு ஏற்படத் தொடங்கிவிட்டது. அதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும்கூட, தாயக ஈர்ப்புடைய புலம்பெயர்ந்தோர் ஓய்வுக் காலத்தை நோக்கி நகர ஆரம்பித்துவிட்டமை முக்கியமானதாகும்.

எதுஎப்படியாகிலும், புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தின் மிகப்பெரிய சவாலே, ஒரு சமூகமாகத் திரளமுடியவில்லை என்பதாகும். அவர்களிடையே நிலைபேறான திரட்சி சாத்தியப்படவில்லை.

மொழியால் ஒன்றுபடலாம். மதத்தினால் ஒன்றுபடலாம். பிறந்த ஊர் அல்லது கல்விகற்ற பாடசாலை என்ற அடிப்படையில் ஒன்றுபடலாம். ஆனால், அவையெல்லாம் புலம்பெயர்ந்த சமூகத்தைத் துண்டாடுகின்றன.

எங்கும், எதிலும், எப்போதும் முரண்பாடுகளே ஏற்படுகின்றன. தனிமனித முனைப்பு மட்டுமே துருத்திக்கொண்டு தெரிகின்றது. ஒவ்வொருவரும், தான்பிடித்த முயலுக்கு மூன்றுகால் என்பதை நிறுவுவதற்கே முயல்கின்றனர். அதனால், ஒருவரிடமிருந்து மற்றவர் எளிதில் அன்னியப்படுகின்றார்.

இதற்கான மூலகாரணங்களைக் கண்டறிவது எளிதானதல்ல. புலம்பெயர்வின் வலிகள் ஒருபுறத்தில் உள்ளன. தாயகச்சூழலிலிருந்து சுமந்துவந்த எச்சசொச்சங்கள் மறுபுறத்தில் உள்ளன. இவ்விரண்டின் கலவையே, புலம்பெயர்ந்த சமூகத்திலே காணப்படுகின்ற முரண்பாடுகளின் உந்துவிசையெனலாம்.

உதாரணத்திற்கு சொல்வதெனில், விடுதலை இயக்கங்களிடையேயான முரண்பாடுகளின் பிரதிபலிப்பை, யுத்தம் முடிவடைந்து பதினைந்து ஆண்டுகளின் பின்னரும், புலம்பெயர்ந்தோரிடையே காணமுடிகின்றது.

புலம்பெயர்ந்தோர் என்று விளிக்கும்போது, அது தொடர்பில் ஒரு பிரமாண்டமான விம்பம் தாயகத்தில் கட்டமைக்கப்படுகின்றது. யதார்த்தம் அதுவல்ல.

புலம்பெயர்ந்தோர் எண்ணிக்கை கணிசமானதாக இருக்கலாம். ஆனால், தாயகம் தொடர்பிலான கரிசனை கொண்டவர்களுடைய எண்ணிக்கை குறைவானதாகும்.

அத்தகையதொரு குறைந்த எண்ணிக்கையிலானவர்கள்கூட உதிரிகளாகவே காணப்படுகின்றனர். ஒரு சமூகமாகத் திரட்சியடையவில்லை. அதற்கான சான்றுகளைத் தேடி அலைய வேண்டிய [illegible] திசையெல்லாம் சிந்திக்கிடக்கின்றன.

புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்கள் வகைதொகையின்றிப் பெருகியுள்ளன. கலாதியான பெயர்களை அமைப்புக்குச் சூட்டிக் கொள்கின்றனர். எடுத்தார் கைப்பிள்ளையாகி விடுகின்றனர். அதனால் பிரச்சினைகளுக்குப் பஞ்சமில்லை. வீதியிலே இறங்கி ஆர்ப்பாட்டம்கூட நடாத்துகின்றனர். அமைப்புக்கான தேர்தல் வரும்போதெல்லாம் பிரச்சினைகள் உச்சம் தொடுகின்றன. கைகலப்புகள் சர்வசாதாரணமாகின்றன. உடைப்பு மட்டுமே முக்கியெடுத்த முத்தாகின்றது. இத்தைகைய போக்குகளினால், இளைய தலைமுறையினர் விலகியோடுகின்றனர்.

ஆக, சமூகமாகத் திரட்சியடையவே திணறுகின்ற மக்கள்கூட்டம் தொடர்பில்,தாயகத்தில் கட்டமைகின்ற "புலம்பெயர்ந்தோர்" தொடர்பிலான விம்பம், வயல்வெளிப் பொம்மையையே நினைவுபடுத்துகின்றது. ●

## இழவைத் தொலைக்க வளவை சோலையாக்குவோம்

வளவு முழுவதும் சோலை ஆகட்டும்
நிலவு போலக் குளிரும் இல்லம்.

அடவு நாட்டில் அதிகம் சூழட்டும்
பொழிவு மாரி உள்ளம் கிள்ளும்

அழிவு புவியில் காடு என்றால்
விளைவு பச்சை வீடு என்போம்

படிவு வாயு பாரத்தால் சூழக்
கதிர்வு புவியில் தெறித்துப் போகா

அதிர்வு வெப்ப அலை தோன்றும்
பிரிவு மனிதர் நிலை ஆகும்.

ஆதலால்....

நடவு நித்தம் நடந்தேற உலகின்
நினைவு உமை வாழ்த்தி நிற்கும்

கனவு அல்ல எளிய வழியாகுமிது
நனவு நல்ல ஈரமான வளியாகும்

ஆனாலும்...

புலவு செய்ய அடரை அழித்து
வளைவு வீதிகள் குறுக்கு அறுத்து

புனைவு திட்டம் புதிய குடியிருப்பு
களவு கடத்தல் மரமென்று நாளும்

களைவு காடுகளின் இருப்பு எனில்
பிறழ்வு சூழலில் உருவாகும் இனி

அழிவு அங்கு விசமென நிசமாகும்
சூழ்வு வெப்பம் தலை விரித்தாடும்

ஆதலால்....

முடிவு ஒன்றுதான் மரம் நடுகை
முயல்வு பலிக்கும் கார் காலம்

தீர்வு உடலும் உள்ளமும் குளிராகும்
பரிவு பாசம் கருணை உவந்துபெற

தெரிவு இயற்கைப் பேரருள் தான்
வாழ்வு இருப்பு வளமாகத் தாயே!
குளிர்வு தருவாய் தருவாக நீயே!

மகேசன் கஜேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்து 15 வருடங்கள்: தமிழர் அரசியல் எங்கே போகிறது?

சுமார் முப்பது வருடங்களாக நீடித்த இலங்கையின் உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்து பதினைந்து வருடங்கள் கடந்துவிட்டன. அரசியல் பிரச்னைகளும் தீரவில்லை. பொருளாதாரத்திலும் நாடு முன்னேறவில்லை. மாறாக சகல பிரச்சினைகளுமே முன்னரை விடவும் மிகவும் மோசமாக தீவிரமடைந்து நாடு இறுதியில் வங்குரோத்து நிலை அடைந்ததையே நாம் கண்டோம்.

நாட்டைச் சின்னா பின்னப்படுத்திய போருக்கு காரணமான தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் இணங்கத் தீர்வு ஒன்றைக் காணவேண்டிய தேவை ஒன்று இருக்கிறது என்று தென்னிலங்கை சிங்கள அரசியல் சமுதாயத்தின் பெரும்பகுதியிடம் சிந்தனை இருப்பதாக தெரியவில்லை.

இந்த பதினைந்து வருடங்களிலும் சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை ஓரளவுக்கேனும் திருப்திப்படுத்தக்கூடிய அரசியல் இணக்கத்தீர்வு ஒன்றைக் காண்பதை நோக்கிய திசையில் ஒரு அங்குலமேனும் நாடு முன்னோக்கி நகரவில்லை.

மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக அரசியலமைப்பின் அங்கமாக இருந்துவரும் 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது கூட இறுதியில் சாத்தியம் இல்லாமல் போய்விட்டது. உலகின் வேறு எந்த நாட்டிலும் அரசியலமைப்பில் உள்ள ஒரு ஏற்பாட்டை நடைமுறைப்படுத்தக் கூடாது என்று வலியுறுத்தி அரசியல் சக்திகள் வீதிகளில் இறங்கி போராடியதாக நாம் இதுவரை அறியவில்லை. ஆனால் இலங்கையில் அது நடக்கிறது.

இலங்கைப் பாதுகாப்பு படைகள் போரில் விடுதலை புலிகளை தோற்கடிப்பதற்கு துணிச்சலான அரசியல் தலைமைத்துவத்தை வழங்கிய பெருமைக்கு எப்போதும் உரிமை கோரும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு சிங்கள மக்களின் ஆதரவுடன் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான அரிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பம் ஒன்று கிடைத்தது. ஆனால் அவர் அந்த வாய்ப்பை வேண்டுமென்றே அலட்சியம் செய்து இலங்கையை நீண்டகாலத்துக்கு ஆட்சி செய்யும் கனவுடன் பெரும்பான்மை இனவாத அரசியலை மேலும் தீவிரமாக முன்னெடுத்தார். அவர் போர் வெற்றியை அதற்காக தாராளமாகப் பயன்படுத்தி முக்கிய பிரச்சினைகளில் இருந்து சிங்கள மக்களின் கவனத்தை திசைதிருப்பினார்.

அந்த தந்திரோபாயம் சில வருடங்களுக்கு அவரது குடும்பம் ஆட்சியதிகாரத்தில் இருப்பதற்கு உதவியதே தவிர, சிங்கள மக்களுக்கு எந்த நன்மையையும் கொண்டு வரவில்லை. பெரும்பான்மை இனவாத அணிதிரட்டல் என்பது அடிப்படையில் தவறான ஆட்சி முறையையும் ஊழல் முறைகேடுகளையும் மூடிமறைப்பதற்கான ஒரு உபாயமாகவே முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கிறது என்ற உண்மை அம்பலமாவதற்கு நீண்டகாலம் எடுக்கவில்லை. என்றாலும் இன்னமும் கூட தென்னிலங்கை அதில் இருந்து முறையான பாடத்தைக் கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை.



இலங்கை அரசியல் வரலாறு காணாத மக்கள் கிளர்ச்சி ராஜபக்சாக்களை இரு வருடங்களுக்கு முன்னர் ஆட்சியதிகாரத்தில் இருந்து விரட்டிய பின்னரும் கூட இன்னமும் அவர்கள் திரைக்குப் பின்னால் இருந்து அரசாங்கத்தை இயக்கக்கூடியதாக இருப்பதும் தங்களது ஆதரவையும் ஆசீர்வாதத்தையும் பெறும் வேட்பாளரே அடுத்த ஜனாதிபதியாக வருவார் என்று அவர்களால் கூறக்கூடியதாக இருப்பதும் பெரும் துரதிர்ஷ்டவசமானதாகும்.

மக்கள் கிளர்ச்சியும் அதற்கு பின்னரான அரசியல் நிலைவரமும் தென்னிலங்கை மக்களின் அரசியல் சிந்தனையில் ஏதாவது நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறதா என்பதை தேசிய தேர்தல் ஒன்றின் மூலம் மாத்திரமே தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இன்னமும் நான்கு மாதங்களில் நடத்தப்படவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் பொருளாதார நெருக்கடி மீதே பிரதான வேட்பாளர்கள் கவனம் செலுத்துவார்கள். வேறு பிரச்சினைகளுக்கு குறிப்பாக தேசிய இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வைக் காணவேண்டிய அவசியம் குறித்து அவர்கள் அக்கறை செலுத்தக்கூடிய சாத்தியமில்லை.

கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் மேதினப் பேரணியில் உரையாற்றிய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசா தனது எதிர்கால அரசாங்கம் சிறுபான்மைச் சமூகங்களின் பிரச்சினைகளுக்கு சிங்கள மக்களின் ஆதரவுடன் தீர்வைக் காணும் என்றும் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் என்றும் கூறினார். ஆனால், தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அதை அவர் குறிப்பிடுவாரா என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை, தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்கு சிறுபான்மைச் சமூகங்கள் குறிப்பாக தமிழர்கள் அணுகக்கூடிய ஒரே சிங்களத் தலைவர் என்ற தோற்றப்பாடு ஒன்று அவருக்கு இருக்கின்ற போதிலும், சிங்கள தேசியவாத வாக்காளர்களை அந்நியப்படுத்தக்கூடியதாக இனிமேலும் எந்த அணுகுமுறையையும் கடைப்பிடிக்கும் துணிச்சலை அவர் காண்பிக்கக்கூடிய சாத்தியம் இல்லை.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார திசாநாயக்க அண்மையில் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்திய உரையொன்றில் பதின்மூன்று பிளஸ் என்றோ அல்லது சமஷ்டி அடிப்படையிலான தீர்வு என்றோ வாக்குறுதி வழங்குவதன் மூலம் தமிழர்களிடம் வாக்குகளைப் பெறுவதற்காக பேரம் பேசப்போவதில்லை என்று கூறியிருந்தார். சகல சமூகங்களையும் அரவணைக்கும் வகையில் இலங்கையர் என்ற அடையாளத்தை ஏற்படுத்தப்போவதாக அவர் உறுதியளித்தார். அது தொடர்பில் அண்மையில் தனது கட்டுரை ஒன்றில் அரசியல் ஆய்வாளர் ராஜன் பிலிப்ஸ் ஏற்கெனவே ஒவ்வொருவரினதும் தேசிய அடையாள அட்டையிலும் கடவுச்சீட்டிலும் ஒரு வகை அடையாளம் இருக்கிறது. அநுரா குமார மேலதிகமாக என்ன அடையாளத்தைக் கொடுக்கப்போ



கிறாரோ என்று நகைச்சுவையாக கேள்வி எழுப்பியிருந்தார்.

சிறுபான்மைச் சமூகங்களின் வாக்குகளைப் பெறுவதற்காக சிங்கள மக்கள் விரும்பாத எந்தவொரு வாக்குறுதியையும் பிரதான வேட்பாளர்களில் எவரும் வழங்கப் போவதில்லை என்பது நிச்சயமானது. அதேவேளை தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண வேண்டிய அவசியத்தை எந்த வேட்பாளரும் தங்களது தேர்தல் பிரசாரங்களில் சிங்கள மக்களிடம் உரத்து வலியுறுத்துவார்கள் என்றும் எதிர்பார்க்க முடியாது.

சிங்கள மக்கள் மத்தியில் காணப்படும் தவறான சிந்தனைகளின் பின்னால் செல்கின்றவர்களாகவே அரசியல்வாதிகள் இருக்கிறார்கள். பாரதூரமான விளைவுகளைக் கொண்டுவந்த கடந்த காலப் பாதையில் இருந்து சிங்கள மக்களை சரியான பாதைக்கு திசைதிருப்பும் வரலாற்றுப் பொறுப்பை உணர்ந்த தலைவராக எவரையும் காண முடியவில்லை.


இத்தகைய பின்புலத்தில், போருக்கு பின்னரான கடந்த பதினைந்து வருடங்களில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகள் மாத்திரமல்ல, அவர்களின் வாழ்வாதார மனிதாபிமானப் பிரச்சினைகளும் கூட மேலும் உக்கிரமடைந்திருக்கின்றன.

அரசாங்கப் படைகளினதும் கடும்போக்கு சிங்கள தேசியவாத அரசியல் சக்திகளினதும் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் ஆக்கிரமிப்புகளில் இருந்து தங்களது நிலங்களை தமிழ் மக்களால் பாதுகாக்க முடியாமல் இருக்கிறது. போரில் இறந்தவர்களை நினைவு கூருவதற்கு கூட அவர்கள் போராட வேண்டியிருக்கிறது.



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

அத்தகைய நினைவுகூரல் நிகழ்வுகளை படையினரையும் பொலிசாரையும் பயன்படுத்தி தடுப்பது இனப்பாகுபாட்டின் குரூரமான ஒரு வடிவமாகும். இந்த தடவை பொலிசாரின் நடவடிக்கைகளில் ஒரு விசித்திரமான அணுகுமுறையை காணக்கூடியாக இருக்கிறது. வடமாகாணத்தில் நினைவு நிகழ்வுகளுக்கு எந்த இடையூறையும் செய்யாத பொலிசார் கிழக்கு மாகாணத்தில் மாத்தி



ரம் அவற்றை தடுக்கிறார்கள். இதன் பின்னால் உள்ள தர்க்கத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

போருக்கு பின்னரான காலகட்டத்தில் தமிழ் மக்களை உரிய முறையில் வழிநடத்துவதற்கு உருப்படியான அரசியல் சமுதாயம் ஒன்று இல்லை என்பது அவர்கள் எதிர்நோக்குகின்ற ஒரு முக்கியமான பிரச்சினையாகும். தமிழ் மக்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆனால், கடந்தகால அவல அனுபவங்களில் இருந்து படிப்பினைகளைப் பெற்று சமகால உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் நிலைவரங்களுக்கு பொருத்தமான முறையில் அவர்களை வழிநடத்துவதற்கு விவேகமான அரசியல் தலைவர்கள் இல்லை.

போரின் முடிவுக்கு பிறகு வடக்கு,கிழக்கு மாகாணங்களின் தமிழ் மக்களுக்கு தலைமை தாங்கும் வரலாற்றுப் பொறுப்பு தமிழ்த் தேசிய கூட்டமைப்பிடம் தானாக வந்துவீழ்ந்தது. அதை உகந்த முறையில் கையாண்டு மீண்டும் தமிழ் மக்கள் மத்தியில் கட்டுறுதியான ஒரு அரசியல் சமுதாயத்தை நிறுவவுதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள் தவறினர். வெறுமனே கட்சி அரசியல் நலன்களை முன்னிறுத்தி அவர்கள் செயற்பட்டார்களே தவிர, போருக்கு பின்னரான சூழ்நிலைகளில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தக்கூடிய ஒன்றிணைந்த பலமான ஒரு அரசியல் சக்தியாக கூட்டமைப்பைக் கட்டியெழுப்புவதில் அக்கறை காட்டவில்லை. அதற்கான விவேக்மோ அல்லது அர்ப்பணிப்போ அவர்களிடம் இருக்கவில்லை.

அதன் விளைவாக இன்று தமிழர் அரசியல் சமுதாயம் சிதறுண்டு கிடக்கிறது. சகல தமிழ்க் கட்சிகளுமே ஏதோ ஒரு வகையில் பிளவுண்டு கிடக்கின்றன. அவர்கள் தங்களுக்கு இடையிலான தகராறுகளைத் தீர்ப்பதற்கே இயலாதவர்களாக இருக்கும்போது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகளில் அக்கறை காட்டுவதற்கு நேரம் எங்கே இருக்கிறது?

தமிழர்களுக்கு எவற்றைக் கொடுக்கக்கூடாது என்பதில் பல்வேறு முரண்பாடுகளுக்கு மத்தியிலும் சிங்கள அரசியல் சமுதாயம் பெரும்பாலும் ஐக்கியப்பட்ட ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்ற அதேவேளை, தமிழ் மக்களுக்கு தேவையானவற்றைக் கோருவதற்கு ஐக்கியப்பட்ட ஒரு நிலைப்பாட்டுக்கு வரமுடியாமல் தமிழ்க்கட்சிகள் இருக்கின்றன.

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயதுபோன தலைவர் சொன்னதும்(?) நம்பகமற்ற மொட்டை அறிக்கையும்!

பனங்காட்டான்

‘இரா. சம்பந்தன் அவருடைய முதுமையினால் செயற்பாட்டு அரசியலில் பங்களிப்பு செய்யமுடியாதி ருப்பதன் காரணமாக பதவியை துறக்க வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்னர் அவரால் நாடாளுமன்றத்துக்கு சமுகம ளிக்க முடியாத நிலைமை ஏற்பட ஆரம் பித்த சந்தர்ப்பத்தில் நான் அவரிடத்தில் நேரடியாக பதவி விலகுமாறும் கோரினேன்”.

இந்தக் கருத்து இலங்கையின் தொலைக்காட்சி ஒன்றில் சில மாதங்களுக்கு முன்னர் வெளிவந்தது. இதனை தெரிவித்தவர் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன்.

‘288 நாடாளுமன்ற அமர்வு நாட்களில் வெறுமனே 39 நாட்கள்தான் சம்பந்தன் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்திருக்கிறார். அவருடைய வருகை வீதம் 13.6 சதவீதமாக உள்ளது. நாடாளுமன்ற சம்பளமாக நான்கு மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. எரிபொருள், தொலைபேசி மற்றும் போக்குவரத்து உள்ளிட்டவைக்காக 4,19,000 ரூபா வழங்கப்பட்டுள்ளது” என்ற விபரம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினூடாக சம்பந்தப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சியில் தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தன் இப்போதும் மூன்று மாத நாடாளுமன்ற லீவில் கொழும்பு பங்களாவில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடப்பட வேண்டியது. சம்பந்தனின் இயலாமை பற்றிய கருத்தை சுமந்திரன் மட்டுமன்றி கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட திருமலை தமிழரசு வேட்பாளர் சண்முகம் குகதாசனும் இன்னொரு தொலைக்காட்சியில் வழிமொழிவதுபோல கூறியிருந்தார்.

‘ஐயாவுடன் தொலைபேசியில் உரையாட முடியாது. ஐயா சொல்வது எங்களுக்கு விளங்காது. நாங்கள் சொல்வதை அவர் புரிய மாட்டார். அவருடைய மகன்தான் அவர் சார்பில் தொலைபேசியில் உரையாடுவார்” என்று குகதாசன் ஒரு குற்றப்பத்திரிகையையே தொலைக்காட்சிச் செவியில் வாசித்தார்.

இவ்வாறு செயற்பட முடியாது நாடாளுமன்ற லீவில் இருக்கும் சம்பந்தன் கூறியதாக சுமந்திரன் தெரிவித்திருக்கும் கருத்து பல ஊடகங்களில் சில நாட்களுக்கு முன்னர் பரபரப்பாக வெளியானது. வயோதிப நிலையில் விளக்கமாக உரையாடவும், விபரமாக விளங்கிக் கொள்ளவும் முடியாதிருக்கும் அவர் மீது கரிசனை கொண்டு அவரை பதவியிலிருந்து விலகுமாறு கேட்டதாக பகிரங்கமாகத் தெரிவித்த சுமந்திரன், இப்போது அவர் தம்மிடம் தெரிவித்ததாக சில விடயங்களை பொதுவெளியில் பகிரங்கப்படுத்தி சூடு பிடித்திருக்கும் பொதுவேட்பாளர் விடயத்தை நெருப்புக்குள் தள்ளி விட்டுள்ளார்.

சம்பந்தன் கூறியதாக சுமந்திரனால் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் எங்கே, எப்போது, எவ்வாறு தெரிவிக்கப்பட்டது என்ற விபரங்கள் எங்கும் இல்லை. நம்பினால் நம்புங்கள் என்ற பாணியில் சுமந்திரன் தெரிவித்த சம்பந்தனின் கருத்துகள்(?) அமைந்துள்ளன.

சம்பந்தன் பொதுவேட்பாளர் விடயத்தில் சாதகமற்றவராக இருப்பதை இந்த அறிக்கை தெரிவிக்கின்றது. தமிழ் பொதுவேட்பாளர் கருத்துக்கு இடமளிக்க வேண்டாமென்ற கருத்தை அவர் வலியுறுத்திச் சொல்வதாக இங்கு கூறப்படுகிறது. (இதே கருத்தையே சுமந்திரன் கடந்த பல வாரங்களாக தெரிவித்து வருகிறார் என்பதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்).

தமிழரின் அரசியல் வரலாற்றில் ஜனாதிபதி தேர்தலில் முதன்முதலாக தமிழர் ஒருவர் பொதுவேட்பாளராக போட்டியிட வேண்டுமென்ற யோசனை பல்வேறு மட்டங்களில் முனைப்புப் பெற்று நிற்கும் வேளையில் ‘மூத்த தலைவர்’ - ‘பெருந்தலைவர்’ என்ற சிறப்புப் பெயர்களுடன் வர்ணிக்கப்படும் சம்பந்தன் தமது வயோதிப நிலையில் சொன்னதாகக் கூறப்படும் கருத்துகள் இன்று பல வகைகளில் விமர்சிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக ஏற்கனவே தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராஜாவுடனும், புதிய தலைவராக தெரிவாகியும் பதவி ஏற்க முடியாதிருக்கும் சிவஞானம் சிறீதரனுடனும் தாம் உரையாடியதாக சம்பந்தன் கூறியதாக சுமந்திரனின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**“... The Indians agreed to this. I took a calculated risk, as I had in 1957, opposed the Bandaranaike - Chelvanyaakam Pact on this very issue. There was however the escape clause of a referendum which I hoped would mollify critics of this move, because Sinhalese and the Muslims who together constituted 60 percent of the population of the Eastern Province would not willingly accept this merger and that at a referendum the 60 percent would win” - J.R.Jayaewardene’s MEN AND MEMORIES (Page 109)**

ஆனால் அவர்கள் இருவரும் இதுவரை எங்கும் சம்பந்தன் அவ்வாறு தங்களிடம் உரையாடியதாக தெரிவிக்கவில்லை. அதேவேளை இவர்கள் இருவரும் கொள்கை அளவில் பொதுவேட்பாளரை ஏற்றுக் கொண்டவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். சில நாட்களுக்கு முன்னர் வடக்குக்குச் சென்ற அமெரிக்க தூதுவர் ஜூலி சங் அவர்களுடன் உரையாடுகையில் பொதுவேட்பாளர் தொடர்பான தமது ஆதரவு நிலைப்பாட்டை புரியும் மொழியில் வெளிப்படுத்தியிருந்தார் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

தமிழரின் பொதுவேட்பாளராக தம்மைப் போட்டியிட வருமாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் பிரேமச்சந்திரன் கேட்டதாக சுமந்திரன் தெரிவித்ததும், அவ்வாறு தாம் ஒருபோதும் சுமந்திரனைக் கேட்கவில்லையென சுரேஷ் பிரேமச்சந்திரன் மறுத்ததும் சுவாரஸ்யமான ஒரு குறு நாடகம். இருவருமே மக்களின் நம்பிக்கையை இழந்தவர்களாக இருப்பினும், இதில் யாரோ ஒருவர் மட்டும்தான் பொய் சொல்பவராக இருக்க வேண்டும். அவர் யார் என்பதை இலகுவாகக் கண்டு கொள்ளலாமென தமிழரசு வீட்டைச் சேர்ந்த கிழக்கு மாகாண பிரமுகர் ஒருவர் தமது சகாக்களிடம் தெரிவித்துள்ளார்.

சுமந்திரனின் அரசியல் நேர்மை பற்றி ஆராய்வதற்கு முன்னர் சம்பந்தன் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்தின் முரண்பாடுகள் முதன்மை பெறுகின்றன.

சம்பந்தன் அவர்கள் ஒஸ்லோ பிரகடனம் என்ற ஒரு சொல்லாடலை பயன்படுத்தியுள்ளார். அவ்வாறு ஒரு பிரகடனம் ஒருபோதும் வெளியிடப்படவில்லை. அது ஒரு அறிக்கை மட்டுமே. இதனை விடுதலைப் புலிகளின் தலைவர் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒஸ்லோ அறிக்கையானது ஆறு கட்டப் பேச்சுவார்த்தையுடன் முடிவுக்கு வந்தது. இதனை ஏனோ சம்பந்தன் புரிந்து கொள்ளவில்லை.

ராஜிவ் - ஜே.ஆர். ஒப்பந்தம் என்பது சமஷ்டி முறையில் வடக்கும் கிழக்கும் இணைந்த தீர்வுக்கு இணக்கம் காணப்பட்டதாக சம்பந்தன் சொன்னார் என்று சுமந்திரன் தெரிவித்துள்ளார். 1987 யூலை ஒப்பந்தத்தில் அப்படி எதுவுமே இருப்பதாக எவருக்கும் தெரியாது. மாகாணசபை நிர்வாகத்துக்காக வடக்கையும் கிழக்கையும் ஆரம்பத்தில் தற்காலிகமாக இணைத்து ஒரு மாகாண சபையை அமைக்க இந்த ஒப்பந்தம் வழி சமைத்தது.

1990ம் ஆண்டு முதலாவது வடகிழக்கு மாகாணசபை கலைந்த பின்னர், இன்றுவரை அது காணாமல் போனதாகவே உள்ளது. வடக்கு கிழக்கு மாகாண சபைக்காக தற்காலிக இணைப்பை நரித் தந்திரமாக ஜே.ஆர்.ஜெயவர்த்தன இறுதி நேரத்தில் ஒப்பந்தத்தில் புகுத்தினார். இதனை அவரே தமது சுயசரிதையில் நேர்மையாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர், 1992ம் ஆண்டில் Men and Memories என்ற பெயரில் எழுதிய சுயசரிதை நூலின் 109ம் பக்கத்தில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன இதனை குறிப்பிட்டுள்ளார். வடக்கு கிழக்கு இணைப்பை தற்காலிகமானது என்றும், கிழக்கு மாகாண மக்களிடம் நடத்தப்படும் கருத்துக் கணிப்பில் வெற்றி பெற்றால் மட்டுமே இது சாத்தியமாகும் என்றும் குறிப்பிட்டுள்ள இவர், கிழக்கு மாகாண சனத்தொகையில் சிங்களவரும் முஸ்லிம்களும் அறுபது வீதமாக இருப்பதால் சர்வஜன வாக்கெடுப்பில் இணைப்பு வெற்றி பெறாது என்றும் தெட்டத்தெளிவாக தெரிவித்துள்ளார். அந்த வரிகள் பின்வருமாறு:

‘I suggested that a temporary joinder should have a time-limit and that a referendum be held in the Eastern Province to decide whether or not people there wished their Province to be linked to the Northern Province. The Indians agreed to this. I took a calculated risk, as I had in 1957, opposed the Bandaranaike - Chelvanyaakam Pact on this very issue. There was however the escape clause of a referendum which I hoped would mollify critics of this move, because Sinhalese and the Muslims who together constituted 60 percent of the population of the Eastern Province would not willingly accept this merger and that at a referendum the 60 percent would win” - J.R.Jayaewardene’s MEN AND MEMORIES (Page 109)

இதில் குறிப்பிடப்படும் இணைப்பு சாத்தியப்படாத வகையில் இலங்கை உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் அவரது அனுசரணையுடன் ஜே.வி.பி.யினர் தாக்கல் செய்த வழக்கொன்றில் ஆட்சித் தரப்பின் செல்லப்பிள்ளையாக இருந்த பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவே வடக்கு கிழக்கு இணைப்பை ரத்துச் செய்யும் தீர்ப்பை வழங்கினார் என்பதை சம்பந்தன் வயோதிபம் காரணமாக மறந்துவிட்டார் போலிருக்கிறது.

கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த முடியாது வருடாந்தம் நீடிப்பதைத் தவிர வேறு வழியில்லையென ஜே.ஆர்.ஜெயவர்த்தன தமக்குள் நொந்து கொண்டாரென்று சம்பந்தன் ஜே.ஆருக்காக வக்காலத்து வாங்கியிருப்பதை சுமந்திரனின் அறிக்கையில் காணக்கூடியதாக உள்ளது. இந்த வரிகளை உண்மையிலேயே சம்பந்தன் சொன்னாரா அல்லது அதனை வெளியிட்டவரின் இடைச்செருகலா என்றுகூட சந்தேகம் எழுகிறது.

வரப்போகின்ற ஜனாதிபதித் தேர்தலில் முக்கிய மூன்று வேட்பாளர்களும் ஐம்பது வீத வாக்குகளை பெற முடியாது போகும் நிலைப்பாடு இன்று காணப்படுகிறது. அப்படியானால் தமிழர் தங்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்த நிறுத்தும் பொதுவேட்பாளர் பெறும் வாக்குகள் சம்பந்தன் கூறுவதுபோல விசப்பரீட்சையாக இருக்க முடியாது. இது பலப் பரீட்சையாகவே அமையும்.

ஜனாதிபதிப் பதவியை பெறுவதற்காக பொதுவேட்பாளர் நிறுத்தப்படவில்லை. தமிழரின் அரசியல் அபிலாசைகளை பூகோள பரப்புக்கு தெரிவிப்பதே இதன் அடிப்படை நோக்கம். இவைகளைப் புரிந்து கொள்ளாமல், தமது தமிழரசுக் கட்சியையே பிளவுபடுத்தும் நோக்கில் சம்பந்தன் அவசரப்பட்டு தமது கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். அழைக்கும் போதெல்லாம் ஓடிச் சென்று முன்னால் நிற்கும் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவை இம்முறை அழைத்த போது, சுகயீனம் காரணமாக வரமுடியவில்லை என்று சொன்னதிலிருந்து சம்பந்தன் தமது தற்போதைய இறக்கத்தை புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக எழும் கேள்வி, சுமந்திரன் தெரிவித்த கருத்துகள் உண்மையாகவே சம்பந்தன் சொன்னவைதானா என்பது. சிலவேளை அவர் சொன்ன கருத்துகளை தமது விருப்புக்கு ஏற்றவாறு சுமந்திரன் கூட்டிக் கழித்திருக்கலாமென்றும் கருத இடமுண்டு. முக்கியமாக, இந்த அறிக்கையில் சம்பந்தன் ஒப்பமிடாததால் அது அதன் நம்பகத்தன்மையை இழந்து நிற்கிறது என்பதே யதார்த்தம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தகவல் 33வது ஆண்டு பூர்த்தி விழா
## மலர் வெளியீடும் விருதுகள் வழங்கலும்








கனடிய தமிழர்களின் அடையாளமாகத் திகழும் கனடாவின் மூத்த தமிழ் இதழான தமிழர் தகவல் சஞ்சிகையின் 33வது ஆண்டு பூர்த்தி விழா கடந்த மாதம் (ஏப்ரல்) 28ம் திகதி ரொறன்ரோ நகரசபையின் அங்கத்தவர் சபாபீடத்தில் நிகழ்ந்தேறியது. ரொறன்ரோ நகர மேயர் ஒலிவியா செள பிரதம விருந்தினராகவும், கனடிய எதிர்க்கட்சித் தலைவரும் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவருமான பியர் பொலிவியர் மற்றும் ஒன்ராறியோ மாகாண அமைச்சர் விஜே தணிகாசலம் ஆகியோர் சிறப்பு விருந்தினர் -களாகவும் விழாவிற் பங்கேற்று உரையாற்றினர். மலர் வெளியீடு அமர்வுக்கு செல்வி அபினா நிமல்ராஜ் தலைமை தாங்கினார். எழுத்தாளர் கனடா மூர்த்தி மலர் வெளியீட்டுரை நிகழ்த்தினர். பிரபல வீடு விற்பனை நிறுவன அதிபர் செல்வா வெற்றிவேல் வாழ்த்துரை வழங்கினர். தமிழர் தகவல் முதன்மை ஆசிரியர் திரு எஸ். - திருச்செல்வம் அவர்களின் கருத்துப் பகிர்வை அடுத்து, ரொறன்ரோ மாவட்ட கல்விச்சபையின் பிரதித் தலைவர் நீதன் ஷண் தலைமையில் விருது வழங்கல் இடம் பெற்றது. நோர்வே பல்கலைக்கழக பேராசிரியர் தயாளன் வேலாயுதபிள்ளை (வாழ்நாள் சாதனையாளர் விருது), திரு. அஜித் சபாரட்ணம் (சமூக சாம்பியன் விருது), கலாநிதி மைதிலி தயாநிதி (பன்மொழிப் புலமையாளர் விருது), திருமதி லலிதாஞ்சனா கதிர்காமன் (நடனக்கலை விருது), திரு. விஜயகுமரன் திருநாவுக்கரசு (வாத்தியக்கலை விற்பன்னர் விருது), திரு. ஹரிஷன் ரவிசங்கர் (இளம் சாதனையாளர் விருது), திருமதி ரதி பரமசாமி (நவீன அறிவியற் தொழிற்துறை விருது) ஆகியோர் விழாவில் விருதுகள் வழங்கி தங்கப் பதக்கம் சூட்டி மதிப்பளிக்கப்பட்டனர். 'இளங்காலைச் சுவடு' என்ற மகுடத்தில் வெளியான ஆண்டு மலர் அண்மையில் காலமான கவிநாயகர் வி.கந்தவனம் அவர்களுக்கு அர்ப்பிதம் செய்யப்பட்டது. இதன் முதற்பிரதியை கவிநாயகரின் பிள்ளைகளான வாணி, வாரணன் ஆகியோரிடம் பேராசிரியர் அமுது யோசெப் சந்திரகாந்தன் கையளித்து பெருமைப்படுத்தினார். தமிழர் தகவல் இதழ்களை ஆரம்பத்திலிருந்து தொடர்ச்சியாக 33 ஆண்டுகள் வடிவமைத்து வரும் கணினிக் கலைஞரும் ஓவியருமான சசி பத்மநாதனையும் அவருக்கு உதவியாக இயங்கி வரும் அவரது துணைவி ரேவதி சசிகரனையும் மதிப்பளித்து ஒன்ராறியோ அரசு வழங்கிய பாராட்டுப் பட்டயத்தை சட்டவாளர் மனுவல் ஜேசுதாசன், திரு. நீதன் ஷண் ஆகியோர் அவர்களிடம் கையளித்து வாழ்த்தினர். விருது பெற்றவர்கள் சார்பில் திரு. அஜித் சபாரட்ணமும், பேராசியர் தயாளன் வேலாயுதபிள்ளையும் நன்றி தெரிவித்து உரையாற்றினர். வழமை போன்று இளையோர் அணி நேர்த்தியாக நெறிப்படுத்தி நேரக்கட்டுப்பாட்டுடன் ஒழுங்காக விழாவை நடத்தி அனைவரதும் பாராட்டைப் பெற்றது. **(ஒளிப்படங்கள்: கமலன் கேகைலிங்கம், புதினம் குணா, ஐயா4u)**























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒஸ்லோ ‘பிரகடனம்’: அப்படி ஒன்று இருக்கிறதா?

**தாமரை காருண்யன்**

உண்மையில் நடந்தது என்ன? ஒஸ்லோ ‘பிரகடனத்தை’ விடுதலைப்புலிகள் ஏற்றுக் கொண்டார்களா? இல்லையா?

இவ் விடயத்தில் என்ன நடந்தது என்பதற்குள் நுழைய முன்னர், ஒஸ்லோ ‘பிரகடனம்’ என்ற பெயரில் உடன்பாடு எதுவும் செய்யப்பட்டதா என்ற கேள்விக்குப் பதிலை நோக்குவோம். இதற்குப் பதில் இல்லை என்பதே.

வட்டுக்கோட்டை பிரகடனம், திம்புப் பிரகடனம் என்பது போல் ஒஸ்லோ ‘பிரகடனம்’ என்ற வார்த்தை பாவனையில் வந்துள்ளதே தவிர அத்தகைய ‘பிரகடனம்’ எதுவும் ஒஸ்லோவில் மேற்கொள்ளப்படவில்லை.

**அப்படியாயின் ஒஸ்லோவில் என்னதான் நடந்தது?**

2002 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 2-5 ஆம் திகதிகளில் சிறிலங்கா அரசாங்கமும் விடுதலைப் புலிகள் அமைப்பும் நோர்வே அரசின் அனுசரணையுடன் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தையினை நடாத்துகிறார்கள்.

விடுதலைப்புலிகள் தரப்பில் அன்ரன் பாலசிங்கம், தமிழ்ச் செல்வன், கருணா, அடேல் பாலசிங்கம் ஆகியோர் இப் பேச்சுக்களில் கலந்து கொள்கின்றனர்.

சிறிலங்கா அரச தரப்பினை ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம், பேர்னாட் குணதிலக ஆகியோர் பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

அனுசரணையாளர்களாக நோர்வே அரச தரப்பிலிருந்து விடார் கெல்கிசன், எரிக் சோல்கெய்ம், யோன் வெஸ்பேர்க் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இப் பேச்சுக்களில் ஒரு முக்கியமான விடயத்தில் சிறிலங்கா அரசாங்க தரப்பும் விடுதலைப் புலிகள் தரப்பும் உடன்பட்டுக் கொள்கின்றனர்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்கள் வரலாற்றுபூர்வமாக வாழ்ந்து வரும் பிரதேசங்களில் சமஸ்டி முறையில் தீர்வு காண்பதற்கான வாய்ப்புக்களை ஆராய்ந்து பார்ப்பதற்கு இரு தரப்பினரும் உடன்பட்டுக் கொள்கின்றனர்.

ஒவ்வொரு சுற்றுப் பேச்சுக்களும் நடைபெற்று முடிவடைந்த பின்னர் பேச்சுவார்த்தைகளில் இடம் பெற்ற விடயங்களை நோர்வே ஒரு ஊடக அறிக்கையாக வெளியிடுவது வழக்கம்.

இதே போல் நோர்வேயில் இடம் பெற்ற மூன்றாம் கட்டப் பேச்சுக்கள் தொடர்பாகவும் நோர்வே அரசு பேச்சுவார்தைகளில் பேசப்பட்ட விடயங்களை, எட்டப்பட்ட உடன்பாடுகளை ஓர் அறிக்கையாக வெளியிடுகிறது.

இவ் அறிக்கையில் இரு தரப்பும் பேச்சுவார்த்தைகளில் உடன்பட்டுக் கொண்ட விடயங்கள் குறிக்கப்படுகின்றன.

**அறிக்கை கூறுகிறது:**

‘விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்தால் முன்வைக்கப்பட்ட ஒரு பிரேரணைக்குரிய பதிலாக - தமிழ் பேசும் மக்கள் வரலாற்றுபூர்வமாக வாழ்ந்து வரும் பிரதேசங்களில், உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், சமஸ்டி முறையில், ஐக்கிய இலங்கைக்குகள் தீர்வு காண்பதற்கான வாய்ப்புக்களை ஆராய்ந்து பார்ப்பதற்கு இரு தரப்பினரும் உடன்பட்டுக் கொண்டனர். இத்தகைய தீர்வு எல்லா சமூகத்தினக்கும் ஏற்புடையதாக இருக்க வேண்டும் என்பதனையும் இரு தரப்பினரும் எற்றுக் கொண்டனர்.

மேலும் நோர்வேயின் இவ் அறிக்கை - மத்திக்கும் (ஊநவெசந) பிராந்தியத்துக்கும் (சுநபழைெ) மற்றும் மத்திக்குமிடையிலான அதிகாரப்பங்கீடு குறித்த விடயங்கள், புவியியல் பிரதேசம், மனித உரிமைகள் பாதுகாப்பு, அரசியல் நிர்வாகப் பொறிமுறை, பொதுநிதி, சட்டம் ஒழுங்கு உள்ளடங்கலான பல்வேறு விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல்ளை முன்னெடுக்கவும் இரு தரப்பினரும் உடன்பட்டுக் கொண்டதாகக் கூறுகிறது.

இந்த அறிக்கையே ஒஸ்லோ ‘பிரகடனம்’ என அழைக்கப்படலாயிற்று.



விடுதலைப்புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் 2004 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டிருந்த தனது நூலில் இவ் விடயத்தினைத் தெளிவுபடுத்தியிருந்தார்.

2010 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் இதனை ஒஸ்லோ உடன்பாடு எனக் குறிப்பிட்டிருந்தது.

ஒஸ்லோவில் விடுதலைப்புலிகள் இயக்கம் எடுத்திருந்த இந் நிலைப்பாடு பேச்சுவார்த்தைகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாக பிரபாகரனும் பாலசிங்கமும் நடாத்திய மந்திராலோனைகளின் பெறுபேறாக வகுக்கப்பட்டிந்த தந்திரோபாயத்தின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது.

2002 ஆம் ஆண்டு யுத்தநிறுத்தமும் அதைத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளும் வந்த போது அதனைப் பிரபாகரன் அணுகியவிதம் முன்னைய காலங்களை விட வேறுபட்டது.

முன்னைய காலங்களில் யுத்தநிறுத்தத்தினையும் பேச்சுவார்த்தைகளையும் விரைவாக முடிவுக்கு கொண்டு வருவது பிரபாகரனின் அணுகுமுறையாக இருந்தது. 2002 இல் பிரபாகரன் அவ்வறு சிந்திக்கவில்லை. யுத்த நிறுத்தத்தினை நீடிப்பதிலும் அதற்காக பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதிலும் அவர் அக்கறை கொண்டிருந்தார்.

2001 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதி அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தாக்குதலுக்குள்ளாகிய பின்னர் தோற்றம் பெற்றிருந்த உலக நிலமைகள் தொடர்பாக அவர் கொண்டிருந்த கவனமும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அமைப்பு சார்ந்த தேவைகளும், யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்த மக்களின் விருப்பு நிலையும் இணைந்த வகையில் தொழிற்பட - அவை குறிப்பிட்டளவு காலம் யுத்தநிறுத்தத்தினை தொடர்வது என்ற முடிவுக்கு அவரை இட்டுச் சென்றிருந்தன.

இதே வேளை யுத்த நிறுத்தத்தைத் நீண்ட காலம் தொடர்வதால் தமது இயக்கத்திற்கு வரக்கூடிய பாதிப்புக்களையும் அவர் உணராமல் இல்லை.

யுத்த நிறுத்தங்களை நீண்ட காலத்திற்குத் தொடர்வது அரசுகளுக்குச் சாதகமாக அமையும் அளவுக்கு போராடும் இயக்கங்களுக்கு இராணுவரீதியாக சாதகமாக அமைவதில்லை. இது உலகளாவிய ரீதியல் விடுதலை இயக்கங்கள் கண்ட ஒரு பட்டறிவு. யுத்த நிறுத்த காலத்தினை அரச இராணுவ இயந்திரம் தன்னை மீள் ஒழுங்குபடுத்திக் கொள்ளப் பயன்படுத்தும். இக் காலத்தில் இராணுவத்தினருக்கு உயிரிழப்புக்கள் குறைவாக இருக்கும் என்பதனால் தொழில்முறையாக இராணுவத்தில் இணைந்திருப்போர் இராணுவத்தினை விட்டுத் தப்பி ஓடுவது குறைவாக இருக்கும். மாறாக இராணுவ இயந்திரம் தனது வெற்றிடங்களுக்கு யுத்த காலங்களினைவிட இலகுவாக புதியவர்களைத் திரட்டிக் கொள்ளும். புதிய இராணுவத் தளபாடங்கள், கருவிகளைப் பெற்றுக் கொள்ளல், புதிய தொழில் நுட்பங்களை இராணுவ இயந்திரத்திற்குள் புகுத்திக் கொள்ளல், எதிர்காலத்துக்குத் தேவையான பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளல் போன்றவை அரசுகளுக்கு விடுதலை இயக்கங்களை விட மிக இலகுவானது. இதைவிட யுத்தம் நிகழாமல் இருந்தாலே அதன் வெகுமதி அரசுகளுக்கு கிடைக்க ஆரம்பித்து விடும். யுத்தம் நிறுத்தப்படும் போது சிறிலங்கா அரசு குறைந்த பட்சம் அதன் மொத்தத் தேசிய உற்பத்தியில் 2 வீதத்தினை சேமிப்பாகப் பெற்று விடும்.

விடுதலை இயக்கங்களைப் பொறுத்தவரை நிலைமை வேறுபட்டது யுத்நிறுத்த காலத்தில் தாமாக விரும்பி விடுதலை இயக்கத்தில் இணைந்து கொள்வோர் தொகை குறைவாக இருக்கும். இதேவேளை, யுத்த நிறுத்த காலத்தில் இயக்கத்திலிருந்து விலகும் போராளிகள் தொகை அதிகமாக இருக்கும். குடும்பச் சுமைகளின் மத்தியில் போராட்டத்தில் இணைந்திருந்த போராளிகள் தமது குடும்பங்களின் மீது கவனத்தை செலுத்தத் தொடங்கும் நிலை உண்டாகும். பெற்றோர்களும் யுத்தம் இல்லாத போது குடும்பச்சுமையை பகிர்ந்து கொள்ளுமாறு தங்கள் பிள்ளைகளைக் கோருவார்கள். இதனால் விடுதலை இயக்கத்தை விட்டு விலகும் போராளிகள் தொகை யுத்த காலத்தை விட யுத்தநிறுத்த காலத்தில் அதிகமாக இருக்கும். விடுதலை இயக்கங்கள் மரபுசார் யுத்தங்கள் புரியும் போது ஏற்படும் ஆட்பல இழப்பு யுத்த நிறுத்த காலத்தில் குறைவாக இருப்பினும் விலகும், இணையும் தொகையின் தாக்கத்துடன் இணைத்துப் பார்க்கும் போது, மொத்தப் போராளிகள் தொகையில் வீழ்ச்சிதான் ஏற்படும். மேலும் நேரடி இராணுவ அழுத்தம் யுத்த நிறுத்த காலங்களில் குறைவாக இருப்பதால் பொது எதிரிக்கு எதிரான கவனம் குறைந்து விடுதலை இயக்கங்களுக்குள் உள்முரண்பாடுகள் தோன்றுவதற்கான நிலைமைகள் கூடுதலாக இருக்கும். ஆயுத தளபாடங்கள் சார்ந்தும் யுத்த நிறுத்த காலங்களில் விடுதலை இயக்கங்களுக்குரிய வாய்ப்புக்கள் அரசுகளை விட மிகக்குறைவுதான்.

விடுதலை இயக்கங்கள் இராணுவத்தினரிடமிருந்து ஆயுத தளபாடங்களைப் கைப்பற்றுவதனையும், வெளிநாடுகளில் கொள்வனவு செய்தோ அல்லது உதவிகள் மூலம் பெற்றோ எடுத்து வருவதனையும் தமது சொந்தத் தயாரிப்புக்களையுமே ஆயுத தளபாடங்களுக்காக நம்பியிருக்க வேண்டும். இவற்றில் சொந்தத் தயாரிப்புக்களில் தங்கியிருப்பதன் மூலம் மரபுசார் யுத்தம் புரிவது இலகுவானது அல்ல. யுத்த நிறுத்த காலத்தில் இராணுவத்திடமிருந்து படைக்கலன்களை கைப்பற்ற முடியாது. ஆயுதங்களைக் கடத்தி வந்தால் சமாதானத்தில் விசுவாசம் இல்லை என்ற குற்றச்சாட்டு எழுந்து விடும்.

இதனால் ஆயுதத் தளபாடங்கள் விடயத்தில் யுத்த நிறுத்த காலங்கள் விடுதலை இயக்கங்களுக்கு ஒப்பீட்டளவில் பாதிப்பானவையாகவே அமையும். விடுதலை இயக்கங்கள் எவ்வளவுதான் முயன்று தன்னை யுத்த நிறுத்த காலங்களில் பலப்படுத்திக் கொள்ள முனைந்தாலும் அரசுகளுக்கு ஈடாக அதனைச் செய்வது இலகுவான விடயமாக இருப்பதில்லை.

இவையெல்லாம் சிறிலங்காவுக்கு அரசு என்ற வகையில் வாய்ப்புக்களையும் விடுதலைப்புலிகளுக்கு விடுதலை இயக்கம் என்ற வகையில் பாதிப்புக்களையும் தரக்கூடியவை. எனினும் இத்தகைய பாதிப்புக்களைக் கையாள மாற்றுத் திட்டங்களை வகுத்துக் கொண்டு யுத்தநிறுத்தத்தை நீட்டிச் செல்லும் முடிவினையே பிரபாகரன் எடுத்திருந்தார்.

2002 இல் ரணிலுடன்தான் பிரபாகரன் புரிந்துணர்வு உடன்பாட்டினை எட்டியிருந்தார். சந்திரிகா ஜனாதிபதியாகவும் ரணில் பிரதமராகவும் இருந்த காலம் அது. முதல் ஒரு வருடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை. அதன் பின்னர் வாய்ப்புக் கிடைத்தால் சந்திரிகா, ரணில் அரசாங்கத்தினைக் கலைத்து விடுவார். இது விடுதலைப் புலிகளின் திட்டத்திற்கேற்ற வகையில் நிலைமைகளைக் கையாள்வதற்கான வாய்ப்புக்களைக் குறைத்து விடும். இவையெல்லாம் பிரபாகரன் - பாலசிங்கம் மந்திராலோசனைகளில் ஆராயப்படுகின்றன.

இதன் ஊடாகத்தான் சுயநிர்ணய உரிமையினை உள்ளக - வெளியக சுயநிர்ணய உரிமையாகப் பிரித்து அணுகுவது என்ற முடிவினை முதன் முறையாக விடுதலைப்புலிகள் இயக்கம் எடுக்கிறது.

நாடு பிரியாத வகையில் தேசியப்பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் முயற்சியினை உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் மேற்கொண்டு அதில் ஏற்படும் நிச்சயமான தோல்வியின் போது, வெளியக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்து சென்று தனிநாடு அமைப்பதற்கு அனைத்துலக ஆதரவினைக் கோருவது என்பதுதான் வகுக்கப்பட்டிருந்த தந்திரோபாயம். இதனை 2002 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் நாள் உரையில் பிரபாகரன் வெளிப்படுத்துகிறார். இதன் தொடர்ச்சியாக அடுத்த வாரம் ஒஸ்லோ பேச்சுவார்த்தைகளில் இம் முடிவு எடுக்கப்படுகிறது. இந்த தந்திரோபாயத்துடன் பேச்சுவார்த்தை அணுகப்பட்டாலும் நோர்வே அரசு விடுத்தது போல் ஓர் அறிக்கையில் இவ் உடன்பாடு பதிவு செய்யப்பட்டது ஒரு பிரச்னைக்குரிய விடயமாக மாறிவிட்டிருந்தது.


வழமையாக பேச்சுக்களில் பேசப்படும் விடயங்கள் அறிக்கையாவதனை விடுதலைப்புலிகள் தரப்பில் பாலசிங்கம்தான் முடிவு செய்வார். ஒஸ்லோவிலும் இந் நடைமுறையே பின்பற்றப்பட்டது. நோர்வேப் பேச்சுவார்த்தைகள் குறித்த நோர்வேயின் அறிக்கை வெளியாகியவுடன் இது ஒஸ்லோ ‘பிரகடனமாக’ ஊடகங்களில் பெரிதுபடுத்தப்பட்டது.

விடுதலைப்புலிகள் தனித் தமிழீழக் கொள்கையினை கைவிட உடன்பட்டுக் கொண்டனர் என்ற சாரத்தில் செய்திகள் வெளியாகின. (பொங்குதமிழ் இணையம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொறன்ரோவில் வடக்கு வெளிச்சம்

குரு அரவிந்தன்





Aurora lights change the Sky

செயற்கை நுண்ணறிவு மாற்றங்கள் விரைவாக ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்க, கனடாவில் இயற்கை நிகழ்வுகளும் சமீபத்தில் எங்கள் பார்வையைத் திருப்பி இருந்தன. சில வாரங்களுக்கு முன் சூரிய கிரகணத்தை நேரடியாகக் கண்களால் பார்க்க ஒரு சந்தப்பம் கிடைத்ததைப் பற்றி எழுதியிருந்தேன். அதேபோல, இந்தவாரம் 'நொதேன் லைட்ஸ்' என்று சொல்லப்படுகின்ற அரோரா பொரியாலிஸ் என்று அழைக்கப்படும் 'வடக்கு வெளிச்சத்தை' ரொறன்ரோ வானத்தில் பார்க்க முடிந்தது. வெள்ளி மற்றும் சனிக்கிழமை இரவுகளில் இந்த வண்ண வெளிச்சம் பல இடங்களில் வானமெங்கும் பரந்து காணப்பட்டதால் பலராலும் பார்க்க முடிந்தது.

பொதுவாக இப்படி ஒரு நிகழ்வைப் பார்ப்பதானால் வடக்கே உள்ள துருவப் பகுதியை நோக்கி நாங்கள் செல்ல வேண்டும். பல நாட்களாக இதைப் பார்க்க வேண்டும் என்று நான் விரும்பியதால், ஏற்கனவே ஐஸ்லாந்திற்குச் சென்ற போதும், அதன் பின் அலஸ்கா சென்ற போதும் இரவிலே வானம் பல நிறங்களாக மாறுவதைக் குறிக்கும் நொதேன் லைட்டைப் பார்த்துப் பிரமித்திருக்கின்றேன். இதுவரை காலமும் இல்லாதவாறு, முதன் முதலாக இம்முறை ரொறன்ரோவிலும் அப்படி ஒரு நிகழ்வை இரவில் பார்க்க எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனாலும் ஐஸ்லாந்தில் பார்த்தது போன்ற பிரமிப்பை இது எனக்கு ஏற்படுத்தவில்லை.

இந்த நிகழ்விற்கு முக்கிய காரணம் சென்ற வியாழக்கிழமை சூரியனில் ஏற்பட்ட சிறிய வெடிப்பு கடுமையான புவி காந்த புயலை உருவாக்கியிருந்தது. இந்தக் காந்தப் புயல்கள் பூமிக்கு அருகில் உள்ள சுற்றுப்பாதையை மற்றும் பூமியின் மேற்பரப்பில் உள்ள கட்டமைப்பினைப் பாதிக்கக்கூடியன. இதனால் ஏற்பட்ட துகள்கள் விரைவாகப் பரவி பூமியின் காந்தப் புலத்தைத் தாக்கிய போது அவை துருவப் பகுதிகளை நோக்கித் தள்ளப்பட்டன.

சூரியனில் இந்த மாற்றங்கள் ஏற்பட்டதால், வளிமண்டலத்தில் அதிக அளவிலான எலக்ட்ரான்கள் வந்து மோதிய போது, ஆக்ஸிஜன் மற்றும் நைட்ரஜன் பல வண்ணக் கதிர்களில் ஒளியை வீசத்தொடங்கின. இது அழகிய நீண்ட பரவலான கதிரியக்க வளைவுகளை உருவாக்கியிருந்தது. சாதாரணமாக ஜி4 அளவில்தான் இது நடப்பது உண்டு. ஆனால் இம்முறை அதைவிடக் கூடுதலாக ஜி5 அளவில் நடந்திருக்கின்றது. அதனால் தான் ரொறன்ரோவிலும் இம்முறை பார்க்க முடிந்தது. சுமார் இருபது ஆண்டுகளின் பின், அதாவது 2005 ஆம் ஆண்டுக்குப் பின் இப்படி ஒரு நிகழ்வு இங்கு நடந்திருக்கின்றது.

வானத்தில் பல நிறங்கள் தோன்றுவதற்குக் காரணம் வளிமண்டலத்தில் எலக்ட்ரான்களின் நகர்வைப் பொறுத்தது. அதன் வேகத்தைப் பொறுத்து நிறமும் மாற்றமடைகின்றது. உயர் ஆற்றல் உள்ள எலக்ட்ரான்கள் மோதும் போது ஆக்ஸிஜன் பச்சை ஒளியையும், குறைந்த ஆற்றல் எலக்ட்ரான்கள் மோதும்போது, சிவப்பு ஒளியையும் ஏற்படுத்துகின்றன. நைட்ரஜனுடன் இவை மோதும் போது பொதுவாக நீல ஒளியை வெளியிடுகிறது. இப்படியாக ஏற்படும் இந்த வண்ணங்களின் கலவை சில சமயங்களில் வானத்தில் ஊதா, இளஞ்சிவப்பு மற்றும் வெள்ளை நிறங்களாகவும் காட்சியளிக்கின்றன.

பூமியில் ஏற்படும் அரோராக்கள் போல ஏனைய கிரகங்களான வியாழன், சனி, யுரேனஸ் போன்றவற்றிலும் காந்த மண்டலமும், வளிமண்டலமும் இருப்பதால் அரோராக்கள் அங்கும் ஏற்படுகின்றன. ஆனால் செவ்வாய், வெள்ளி, புதன் கிரகங்களில் இப்படி ஏற்படுவதில்லை. காரணம் செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிரகங்களுக்கு உலகளாவிய காந்த மண்டலம் இல்லை. அதேபோல புதன் கிரகத்திற்குப் பெரிதாக வளி மண்டலம் இல்லை.

இப்படியான அரோராக்களால் முன்பு ஒரு பாதிப்பும் மக்களுக்கு ஏற்படவில்லை. ஆனால் நவீன கருவிகள் குறிப்பாக மின்காந்த சக்தி பாவனைக்கு வந்ததால், அவற்றின் இயக்கம் அவ்வப்போது பாதிக்கப் படுவதைச் சமீப காலமாக அவதானிக்க முடிகின்றது. இதுவரை எதிர் கொள்ளாத புதிய பிரச்சனையை இப்போது எதிர் கொள்ள வேண்டியிருக்கின்றது.

அரோராவால் தகவல் தொடர்பு சாதனங்களின் செயலிழப்பு, எரிபொருள் கசிவு, ஜிபிஎஸ் தொடர்பின் பாதிப்பு போன்றவை சுவீடன், தென்னாபிரிக்கா போன்ற இடங்களில் சென்ற முறை 2003 ஆம் ஆண்டு அவதானிக்கப்பட்டது. செய்திப் பரிமாற்றத்தில் தவறான கட்டளைகளை உருவாக்கவும் அரோரா காரணமாக இருந்தது.

இனி வருங்காலங்களில் இது போன்ற நிகழ்வுகளால், தவறான கட்டளைகள் வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவுச் சாதனங்களுக்குக் கிடைத்தால், சில சமயங்களில் அவை ஏன், எதற்கு என்றுகூட யோசிக்காமல் மனித குலத்தையே அழித்து விடலாம்.

இதில் உள்ள படங்களில் ஒன்று நேரடியாக எடுக்கப் பெற்றது, இன்னொரு படம் 'ஏஐ' என்ற செயற்கை நுண்ணறிவு நண்பர் எனக்காக எடுத்துத் தந்தது. வித்தியாசமாக இருந்தால் எது என்று கண்டு பிடியுங்கள்.

---




## வியுக்தியார் பதில்கள்

**எம். அகிலேஸ்வரன்**
**சித்தன்கேணி.**

**கேள்வி:** ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தும் விடயம் தொடர்பில்ஆராய்ந்து வருகின்றோம் என்றும், அத்துடன், தேசியத்தின் பால் பற்றுள்ள தமிழ்க்கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் ரெலோ களமிறங்கியுள்ளதாகவும் அந்தக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளாரே. தமிழ்க்கட்சிகளை ஒன்றிணைக்க முடியும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?

**வியுக்தியார்:** பல்வேறு கட்சிகளாக மாத்திரமன்றி கட்சிகளுக்குள்ளும் பல்வேறு குழுக்களாக பிரிந்து கிடக்கின்றது தமிழ் தேசியம். தமிழ் தேசியக் கட்சிகளை ஓரணியாக- ஒரு தேசமாக ஒன்றிணைக்க கிடைத்திருக்கும் இந்த ஜனாதிபதி தேர்தல் என்ற சந்தர்ப்பத்தையும் பாழாக்கிவிட பலர் முயன்று கொண்டிருக்கின்றார்கள். தமிழ் தேசியத்தை சிதைப்பது ஒன்றையே தமது அரசியல் 'அஜண்டாவாக" கொண்டிருப்பவர்கள் கடைசியாக சம்பந்தனையும் துணைக்கு அழைக்க தொடங்கிவிட்ட பின்னர், இன்றுள்ள தலைவர்களில் அடுத்த மூத்தவர் செல்வம் அடைக்கலநாதன் தானே. அவராவது இந்த கட்சிகளை ஒன்றிணைக்கின்ற முயற்சியில் ஈடுபடுவதாவது சற்று ஆறுதலைத் தருகின்றது. அது வெற்றியளிக்குமா தோல்வியடையுமா என்பதற்கு அப்பால் யாராவது முயற்சி செய்தால்தானே ஏதாவது நல்லது நடப்பதற்கு?

---

**சபா. சிவநாதன்,**
**குரும்பசிட்டி, தெல்லிப்பளை.**

**கேள்வி:** 'அரசில் அங்கம் வகித்தாலும் கட்சியின் சுயாதீனத்தன்மையைக் காட்டிக்கொடுப்பதற்கு நாம் தயாரில்லை. அரசிலிருந்து வெளியேறுவதற்குகூட தயாராகவே இருக்கின்றோம்" என்று பொதுஜன பெரமுன தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ச தெரிவித்திருக்கிறாரே. அவர் அரசிலிருந்து வெளியேறுவார் என்று நீங்கள் நம்புகின்றீர்களா?

**வியுக்தியார்:** அவர் சொன்னால் நம்பத்தானே வேண்டும். அவர் அரசிலிருந்து வெளியேறத்தானே வேண்டும். அடுத்து நடக்கும் ஜனாதிபதி தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் உடனே பாராளுமன்றத்தை கலைத்துவிட்டு பொதுத் தேர்தலை நடாத்துவார்கள் என்பதை புரிந்துகொள்ள முடியாதவர் இல்லையே மகிந்த ராஜபக்ச. அதுதான் அவர் இப்படி சொல்கிறார் என்று நினைக்கின்றேன். அடுத்த தேர்தலில் அவர் கட்சி எத்தனை இடங்களை வெற்றிகொள்ளும் என்பதும் அவருக்குத் தெரியாதது இல்லையே. அதுதான் மனுசன் முன்கூட்டியே அரசிலிருந்து வெளியேறுவோம் என்கிறார் என்றுதான் நினைக்கின்றேன்.

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:**: முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் இணைந்து கொண்டுள்ளதுடன், அவர் ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் முன்னாள் இராணுவ வீரர்களை கொண்ட குழுவான ரணவிரு பலகாய அமைப்பின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். இப்படியே ஒவ்வொரு தளபதிகளாக தனது கட்சியில் சஜித் சேர்த்துக் [illegible] எதற்காக என்று நினைக்கிறீர்கள்?

**வியுக்தியார்:** எல்லாம் இந்த பாழாய்ப்போன வாக்குகளுக்காகத்தானே. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இந்த முன்னாள் தளபதி போட்டியிட்டு ஐம்பதாயிரம் வாக்குகளைப் பெற்றவர் அல்லவா?. அவர் வெற்றிபெறமாட்டார் என்று தெரிந்துகொண்டும் ஐம்பதாயிரம் பேர் அவருக்கு வாக்களித்திருக்கிறார்கள் என்றால், அவர் தன்னோடு சேர்ந்தாலும் அந்த ஐம்பதாயிரம் பேரும் தனக்கு வாக்களிப்பார்கள் என்று சஜித் கணக்குப்போடுகிறார் என்று நினைக்கின்றேன். அதைவிட முக்கியமானது, தற்போது முப்படையிலும் உள்ள சுமார் மூன்றுலட்சம் படையினரதும் அவர்களின் குடும்பங்களினதும் வாக்குகள் அண்ணளவாக பத்து- பன்னிரண்டு லட்சங்கள் வருமல்லவா? அதுதான் அரசியல் கட்சிகள் எல்லாமே அதில் கவனம் செலுத்துவதோடு, முன்னாள் படையினரை கட்சியில் சேர்த்துக்கொள்வதற்கு முண்டியடிக்கின்றனர்.

---

**கந்தையா முகுந்தன்**
**சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 75 புதிய சட்டங்களை அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது என்றும் தெற்காசியாவில் புதிய சட்டங்களை செயல்படுத்தும் நாடாக இலங்கை மாறியுள்ளது எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெருமையுடன் தெரிவித்தாராமே. தனக்குத் தேவை என்றால் இப்படி சட்டங்களை துணிந்து நிறைவேற்றும் ஜனாதிபதி அரசியலமைப்பில் இருக்கும் சட்டங்களை அமுல்படுத்த தயங்குவது ஏன்?

**வியுக்தியார்:** நீங்கள் எதனை சொல்லவருகிறீர்கள் என்று புரிகின்றது. அரசியலமைப்பில் இருக்கும் பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது இருக்கட்டும், மாகாணசபைகளுக்கு தேர்தல் நடாத்துவது என்றாலும், அதற்காக ஒரு சட்டம் இயற்றவேண்டும். அதாவது பழைய தேர்தல் முறையில் மாகாணசபைகளுக்கான தேர்தலை நடாத்துவதற்கான தீர்மானத்தை பாராளுமன்றம் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றவேண்டும். ஏற்கனவே நமது சுமந்திரன் எம்.பி. தனிநபர் பிரேரணையாக அதனை சமர்ப்பித்து அது வர்த்தகமானியிலும் பிரசுரமாகிவிட்டது. அதனை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி எப்போது வேண்டுமானாலும் தேர்தலை நடாத்தக்கூடிய நிலையையாவது ரணில் ஏற்படுத்தவேண்டும். இதனைக்கூட செய்யாமல் அவர் அடுத்த தேர்தலில் வாக்குக்கேட்டு தமிழ் மக்களிடம் வரக்கூடாது என்றாவது அவருக்கு உணர்த்துவதற்கு நம் மிடம் தலைவர்கள் இல்லை என்பதுதான் வேதனைக்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோர்ஜிய அரசின் வெளிநாட்டு முகவர் சட்டம்: தாமதமடையும் ஐரோப்பிய ஒன்றிய இணைவு?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

முன்னாள் சோவியத் குடியரசான ஜோர்ஜியாவில், பாராளுமன்றத் தேர்தலுக்கு ஐந்து மாதங்களுக்கு முன்னர் இந்த 'வெளிநாட்டு முகவர் சட்ட' மசோதாவைச் சுற்றியுள்ள சர்ச்சை பாரியளவில் எழுந்துள்ளது. கருங்கடல் (**Black Sea**) நாட்டிற்கு ஒரு முக்கியமான ஜனநாயகப் பரீட்சையாக இச்சட்டம் கருதப்படுகிறது.

ஜோர்ஜியா நாடாளுமன்றம் 'வெளிநாட்டு முகவர்' ( On the transparency of foreign influence - law on foreign agents) மசோதாவை நிறைவேற்றியதால் பெருமளவு மக்களின் எதிர்ப்புகளைத் தூண்டியுள்ளது.




எதேச்சாதிகாரம் மற்றும் ரஷ்ய உத்வேகம் என விவரிக்கப்படும் இந்த நடவடிக்கை, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்காவின் எச்சரிக்கைகளை மீறி அங்கீகரிக்கப்பட்டதாக மேற்குலக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஜோர்ஜிய எதிர்ப்பாளர்கள் சர்ச்சைக்குரிய "வெளிநாட்டு முகவர்" மசோதாவுக்கு எதிராக பாரிய பேரணிகளை நடத்தியுள்ளனர்.

நாட்டில் பரவலான தொடர் அமைதியின்மை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்காவின் எச்சரிக்கைகள் இருந்தபோதிலும், 'வெளிநாட்டு முகவர்கள்" மசோதாவிற்கு பாராளுமன்றம் ஒப்புதல் அளித்ததை அடுத்து, ஜோர்ஜியாவில் ஆயிரக்கணக்கான எதிர்ப்பாளர்கள் தெருக்களில் இறங்கியுள்ளனர்.



ஊடகங்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தங்கள் நிதியில் 20 சதவீதத்திற்கு மேல் வெளிநாட்டில் இருந்து பெற்றால், 'ஒரு வெளிநாட்டு சக்தியின் நலன்களைப் பின்பற்றுவதாக" பதிவு செய்ய வேண்டும் என்று இந்த மசோதா கோருகிறது.

ஆயினும் ஜோர்ஜிய அரசின் மசோதாவை எதிர்ப்பவர்கள் தலைநகர் திபிலிசியில் சர்ச்சைக்குரிய 'வெளிநாட்டு முகவர்" மசோதாவுக்கு எதிராக தொடர்ந்து பாரிய எதிர்ப்பு பேரணிகளை தொடர்ந்தும் நடாத்தி வருகின்றனர்.

கிரெம்ளினின் அரசியல் எதிரிகள் மற்றும் கருத்து வேறுபாடுகளை ஒடுக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட ரஷ்யாவில் இதேபோன்ற சட்டத்தால் இங்கும் இது செல்வாக்கு பெற்றதாக பலரால் பார்க்கப்படுகிறது.

கடந்த செவ்வாயன்று, மசோதாவின் மூன்றாவது மற்றும் இறுதி வாக்கெடுப்பின் போது ஜோர்ஜிய அரசியல்வாதிகள் 84க்கு 30 ஆதரவாக வாக்களித்தனர்.

தலைநகர் திபிலிசியின் மையத்தில் உள்ள பாராளுமன்ற கட்டிடத்திற்கு வெளியே தெருவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ந்தும் கலக தடுப்பு பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆளும் ஜோர்ஜிய ட்ரீம் கட்சியின் உறுப்பினர்களுடன் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் மோதிக்கொண்டதால் பாராளுமன்ற அவைக்குள் கூட கைகலப்பு ஏற்பட்டது.

**திபிலிசி பாராளுமன்றில் கைகலப்பு:**

தலைநகர் திபிலிசியில் பாராளுமன்ற அமர்வின் போது சண்டையிடும் ஜோர்ஜிய அரசியல்வாதிகளை பல ஊடகங்கள் வெளிக்காட்டியுள்ளன.

இந்த வரைவு அடுத்ததாக ஜனாதிபதி சலோமி ஜோராபிச்விலிக்கு நோக்கி செல்கிறது. அவர் அதை வீட்டோ செய்வதாகக் கூறியுள்ளார். ஆனால் அவரது முடிவை ஜோர்ஜியன் ட்ரீம் மற்றும் அதன் கூட்டாளிகளால் கட்டுப்படுத்தப்படும் பாராளுமன்றத்தில் மற்றொரு வாக்கெடுப்பு மூலம் மீற சாத்தியம் உண்டு.



சமீப ஆண்டுகளில் ரஷ்யாவுடன் நெருக்கமாக முன்னாள் சோவியத் குடியரசான ஜோர்ஜியாவின் இந்த நகர்வின் சின்னமாக இந்த மசோதா இருப்பதாக அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

'ரஷ்ய ஆதரவு சட்டம் வேண்டாம்" என்று முழக்கமிட்டு, வாக்கெடுப்புக்கு முன்னதாக சுமார் 2,000 இளம் எதிர்ப்பாளர்கள் பாராளுமன்றத்திற்கு வெளியே கூடினர். சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த நடவடிக்கைக்கு ஒப்புதல் அளித்ததாக செய்தி பரவிய பின்னர் பல ஆயிரக்கணக்கானோர் பேரணியில் சேர்ந்தனர்.



ஆர்ப்பாட்டக்காரர்கள் பின்னர் மத்திய திபிலிசியில் ஒரு முக்கிய சாலை சந்திப்பில் போக்குவரத்தைத் தடுத்தனர். பொலிஸ் உத்தரவை மீறியதற்காக பல ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**ஐரோப்பிய ஒன்றிய இணைவு:**

27 நாடுகளின் ஐரோப்பிய கூட்டமைப்பில் சேர ஜோர்ஜியாவின் நீண்ட கால முயற்சியுடன் இந்த சட்டம் பொருந்தாதது என்று ஐரோப்பிய ஒன்றியம் கூறியுள்ளது.

கடந்த ஆண்டு, ஜோர்ஜியாவிற்கு உத்தியோகபூர்வ ஐரோப்பிய ஒன்றிய வேட்புமனு வழங்கப்பட்டது. மேலும் இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தால், பேச்சுக்களை முறையாகத் தொடங்குவது குறித்து டிசம்பரில் முடிவு எடுக்கப்பட உள்ளது.

ஜோர்ஜியாவிற்கு விஜயம் செய்த அமெரிக்க வெளியுறவுத்துறை உதவி செயலர் ஜிம் ஓ பிரையன், மேற்கத்திய தராதரங்களுக்கு இணங்க சட்டம் கொண்டு வரப்படாவிட்டால், அமைதியானவர்களுக்கு எதிராக வன்முறை நடந்தால், அமெரிக்காவின் பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் நிதித் தடைகளை சம்பந்தப்பட்ட தனிநபர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு எதிராக விதிக்கலாம் என்றார்.

**ஜோர்ஜியாவிற்கு அமெரிக்க உதவி:**

ஜோர்ஜியாவிற்கு அமெரிக்காவால் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட சுமார் 390 மில்லியன் டாலர்கள் வழங்கப்பட இருந்தது. நாம் இப்போது ஒரு எதிரியாக கருதப்பட்டால், ஒரு பங்காளியாக இல்லாமல் மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

ஜோர்ஜியன் ட்ரீம் கட்சி எதிர்ப்பாளர்களை ஆளும் அரசு வன்முறை கும்பல்களாக சித்தரித்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதில் உறுதியாக இருப்பதாக வலியுறுத்தியது. மேலும் இந்த மசோதா தன்னார்வ தொண்டு நிறுவன நிதியின் வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்றார்.

முன்னாள் சோவியத் குடியரசான கருங்கடல் நாடான ஜோர்ஜியாவிற்கு ஒரு முக்கியமான ஜனநாயகப் பரீட்சையாகக் கருதப்படும் பாராளுமன்றத் தேர்தலுக்கு ஐந்து மாதங்களுக்கு முன்னர் இந்த மசோதாவைச் சுற்றியுள்ள சர்ச்சை பாரியளவில் எழுந்துள்ளது. இதன் விளைவு ஐரோப்பிய ஒன்றியத்தில் இணையவுள்ள ஜோர்ஜியாவின் திட்டம் தாமதமாகலாம் என்றே கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வர்த்தகரின் வீட்டில் கொள்ளை பொலிஸார் உட்பட 6 பேர் கைது

கண்டி, மே 19

கண்டி பிரதேசத்திலுள்ள பிரபல வர்த்தகர் ஒருவரின் வீட்டில் போலி நாணயத்தாள்கள் இருப்பதாகக் கூறி, அங்கிருந்து பணத்தை கொள்ளையடிக்க முயன்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட 6 பேர் சந்தேகத்தின் பேரில் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் குறித்த வர்த்தகரின் வீட்டில் போலி நாணயத்தாள்கள் இருந்ததாக சந்தேகநபர்கள் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் குறித்த வர்த்தகரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களின் வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 5000 ரூபாய் போலி நாணயத்தாள்கள் 103 பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் வர்த்தகருக்குச் சொந்தமானது எனக் கூறப்படும் சுமார் 60 இலட்சம் ரூபாய் பணம் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள கண்டி பொலிஸ் அவசரப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் கடமை அனுமதி பெற்று உரிய இடத்துக்கு சென்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட மற்றைய பொலிஸ் உத்தியோகத்தர் கொழும்பு பொலிஸ் தலைமையகத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் எனவும் தெரியவருகிறது.

இவர் குருநாகல் பிரதேசத்தில் வசிப்பவர் எனவும் கைது செய்யப்பட்டுள்ள இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட ஆறு சந்தேக நபர்களும், குறித்த வர்த்தகருக்கு தெரிந்தவர்கள் என தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள வர்த்தகர், தடுப்பு காவலிலுள்ள இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் போலி நாணயத்தாள்களுடன் தனது வீட்டுக்கு வந்து பணத்தை கொள்ளையடிக்க முயன்றதாக பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். (எ)

## சுப்பர் மடம் மக்களால் இனப்படுகொலையை நினைவு கூர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி!



வடமராட்சி, மே. 19

முள்ளிவாய்க்காலில் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்ட மக்களை நினைவு கூர்ந்து நேற்று முன் தினம் தினம்மாலை 4:00. மணியளவில் யருத்தித்துறை சுப்பர் மடம் மக்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

இதில் பிரதேசத்திற்கு உட்பட்ட இளைஞர்கள், யுவதிகள் என பலரும் ஆர்வத்துடன் கஞ்சியை பருகினர். (அ-2)

## முள்ளிவாய்க்கால் கஞ்சி தம்பலகமத்தில்!



திருமலை, மே. 19

திருகோணாமலை தம்பலகமம் பிரதேச செயலாளர் பிரிவு உட்பட்ட நாலு வாசல் பிள்ளையார் கோயிலில் நேற்று முற்பகல் 11:30 மணியளவில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பலர் கலந்து கொண்டு முள்ளிவாய்க்காலில் இறந்து போன மக்களின் நினைவாக இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் வாரத்தின் இறுதி நாளாகிய நேற்று தம்பலகாமம் வாழ் மக்கள் சார்பாக நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. (அ)

## மீண்டும் சுரக்ஷா காப்புறுதி திட்டம்

கொழும்பு, மே. 19

சுரக்ஷா காப்புறுதி திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக ஜனாதிபதியின் பாராளுமன்ற விவகாரங்களுக்கான ஆலோசகர் ஆஷூமாரசிங்க தெரிவித்துள்ளார்.

2017 ஆம் ஆண்டில் ஆரம்பமான காப்புறுதிட்டம் 2022 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டது.

நாட்டின் குழந்தைகளைப் பற்றி சிந்தித்து சுகாதாரக் காப்புறுதியை ஆரம்பிக்க வேண்டியது அவசியம் என தெரிவித்த அவர் பாடசாலை செல்லும் மாணவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு சுரக்ஷா காப்புறுதி திட்டம் உதவும் எனவும் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

"அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் காப்புறுதியில் நிபுணத்துவம் பெற்ற இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் போன்ற நிறுவனம் காப்புறுதி திட்டத்திற்கு பங்களிக்க உள்ளது.

இந்த காப்புறுதியின் கீழ் அரச அல்லது தனியார் வைத்தியசாலையில் உள்நோயாளியாக சிகிச்சை பெறுவதற்கு மூன்று இலட்சம் ரூபா வரையிலும், வெளிநோயாளர் சிகிச்சைக்கு இருபதாயிரம் ரூபா வரையிலும், தீவிர சிகிச்சைக்கு 15 இலட்சம் ரூபா வரையிலும் நன்மைகள் கிடைக்கப்பெறும்.

அனைத்து அரச பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள், மற்றும் விசேட பாடசாலை மாணவர்கள் இந்த காப்புறுதியை பெற உரித்துடையவர்கள்-என்றார். (அ)

# உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்து 15 வருடங்கள்:...

(08ம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதில் தென்னிலங்கை அரசியல் சமுதாயம் அக்கறை அற்றதாக இருக்கும் நிலையில், ஜனநாயக அடிப்படையிலான போராட்டங்களை முன்னெடுத்து அரசாங்கத்தினதும் உலகத்தினதும் கவனத்தை ஈர்ப்பதற்கு முன்னென்றும் இல்லாத வகையில் தமிழ் அரசியல் சக்திகளின் ஐக்கியம் அவசியமாக தேவைப்படுகின்ற வேளையில் அவர்கள் படுமோசமாக பிளவுண்டு கிடக்கும் கவலைக்குரிய நிலையைக் காண்கிறோம்.

அண்மைய வாரங்களாக ஜனாதிபதி தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தும் யோசனை தொடர்பில் தமிழ்க்கட்சிகள் கலந்தாலோசனைகளை நடத்திவருகின்ற போதிலும், அவர்கள் கருத்தொருமிப்புக்கு வருவார்கள் என்று எதிர்பார்ப்பது கஷ்டமானதாகும். சில தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கூறுகின்ற தான்தோன்றித்தனமான நகைப்புக்கிடமான கருத்துக்களை நோக்கும்போது அரசியல் சார்பற்ற கண்ணியமான பிரமுகர் எவரும் பொது வேட்பாளராகக் களமிறங்க முன்வருவாரா என்பது சந்தேகமே.

அதேவேளை, கடந்த காலப் போராட்டங்களின் நினைவுகளுடன் தமிழ் மக்களைக் கட்டிப்போடும் நடைமுறைச் சாத்தியமற்ற அரசியல் செயற்பாடுகள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டங்களில் தங்களது உயிர்களைத் தியாகம் செய்தவர்களையும் போரில் அநியாயமாக கொன்றுகுவிக்கப்பட்ட மக்களையும் நினைவுகூரவும் கௌரவிக்கவும் தமிழ் மக்களுக்கு சகல உரிமைகளும் இருக்கின்றன. ஆனால், கற்பனைசெய்து பார்த்திருக்க முடியாத தியாகங்கள் நிறைந்த அந்த போராட்டங்கள் இறுதியில் அவலமான ஒரு முடிவுக்கு வரவேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது என்று சுயவிமர்சனம் செய்யாமல் வெறுமனே நினைவுகளுடன் வாழ்வதில் எந்த அர்த்தமும் இல்லை. இதை விளங்கிக் கொள்ளவேண்டியது மிக மிக அவசியம்.

இது இவ்வாறிருக்க, தமிழ் தேசிய அரசியலில் இரு புதிய ஆரோக்கியமற்ற போக்குகள் தீவிரமாக ஊடுருவுகின்றன. அதில் ஒன்று மதத்தீவிரவாதம். தமிழ்த் தேசியவாத அரசியல் தொடக்கத்தில் இருந்தே மதசார்பற்றதாகவே இருந்து வந்திருக்கிறது. தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள சகல மதப்பிரிவினரையும் அது அரவணைத்தது. பல தசாப்தங்களாக தமிழர்களின் தலைவராக மதிக்கப்பட்ட காலஞ்சென்ற எஸ்.ஜே வி. செல்வநாயகம் இந்து மதத்தைச் சேர்ந்தவர் அல்ல. ஆனால் முஸ்லிம்கள் உட்பட தமிழ்பேசும் சமூகத்தின் சகல மதப்பிரிவினரும் அவரது தலைமையை ஏற்றுச் செயற்பட்ட காலம் ஒன்று இருந்தது. தமிழ்த் தேசியவாத அரசியலில் இருந்த மிகவும் குறிப்பிடத்தக்க ஆரோக்கியமான அம்சமாகவும் அது விளங்கியது.

அண்மைக்காலமாக தமிழர் அரசியலை இந்துமதத்துடன் அடையாளப்படுத்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதை காணக்கூடியதாக இருக்கிறது. ஜனாதிபதி தேர்தலில் தமிழர்கள் சார்பில் பொது வேட்பாளராக இந்து மதத்தைச் சேர்ந்த ஒருவரே களமிறக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் சிலரால் முன்வைக்கப்படுகிறது. அது மாத்திரமல்ல அண்மைக்காலமாக அரசியல் செயற்பாடுகளில் தங்களை தீவிரமாக ஈடுபடுத்தும் இந்து துறவிகளில் ஒருவரை பொதுவேட்பாளராக நிறுத்தலாம் என்ற யோசனையும் முன்வைக்கப்பட்டது. இந்த முயற்சிகளில் இந்தியாவில் பிரதமர் மோடி தலைமையில் பாரதிய ஜனதா முன்னெடுக்கும் இந்துத்வா கொள்கையின் தாக்கம் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

மற்றையது இலங்கைத் தமிழர் அரசியலில் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள தீவிரவாத நிலைப்பாட்டைக் கொண்ட சக்திகளின் அதிகரித்த செல்வாக்கு.

புலம்பெயர் தமிழ்ச் சமூகம் தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்துக்கு பயனுறுதியுடைய பங்களிப்பைச் செய்த நீண்ட காலகட்டம் ஒன்று இருந்தது. தமிழ் மக்கள் மீதான அரசாங்கங்களின் ஒடுக்குமுறையை சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு கொண்டு சென்றதில் புலம்பெயர் தமிழ்ச் சமூகம் மகத்தான பங்களிப்பைச் செய்தது.

ஆனால், போரின் முடிவுக்கு பின்னரான காலப்பகுதியில் தமிழர் அரசியலில் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள சில சக்திகள் அநாவசியமான ஆதிக்கத்தைச் செலுத்த முனைந்து நிற்கிறார்கள். இதனால் இன்றைய தமிழர் அரசியலில் முன்னென்றும் இல்லாத வகையில் ஊழல்தனமான போக்குகள் அதிகரித்திருக்கின்றன. வெளிநாட்டில் இருந்து அனுப்புகின்ற பணத்தின் மூலம் இலங்கைத் தமிழர் அரசியலின் திசைமார்க்கத்தை தீர்மானிக்க முடியும் என்று அவர்கள் நம்புகின்றார்கள். நாட்டில் வாழும் தமிழர்களுக்கு எத்தகைய அரசியல் தீர்வு வேண்டும் என்பதை மேற்கு ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் பாதுகாப்பான சூழலில் வாழ்ந்துகொண்டு நடைமுறைச் சாத்தியமற்ற தீவிவாதம் பேசுகின்ற சக்திகள் ஒருபோதும் தீர்மானிக்க முடியாது. அதற்கு ஒருபோதும் அனுமதிக்கவும் கூடாது.

வெளிநாட்டு தமிழ்ச் சக்திகளின் ஆரோக்கியமற்ற தலையீடுகள் தமிழ்ப் பகுதிகளில் சமூக விரோத செயற்பாடுகளுக்கும் ஊக்கமளிக்கின்றன. இன்றைய இலங்கைத் தமிழ்ச் சமூகம் நினைத்துப்பார்க்க முடியாத தியாகங்கள் நிறைந்த மூன்று தசாப்தகால விடுதலைப் போராட்டம் ஒன்றைக் கடந்துவந்த சமூகத்துக்கு இருக்கவேண்டிய எந்த குணாதிசயத்தையும் கொண்டதாக இல்லை.

இவ்வாறாக, நிலைவரங்கள் தொடருமாக இருந்தால், உலகம் கவனிக்காத ஒரு மக்கள் கூட்டமாக இலங்கை தமிழர்களும் நடைமுறைச் சாத்தியமற்ற அரசியல் முழக்கங்களைச் செய்துகொண்டு குடாநாட்டுக்குள் மாத்திரம் கொக்கரிக்கின்ற ஒரு கூட்டமாக தமிழ் அரசியல்வாதிகளும் மாறிவிடக்கூடிய அபாயம் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## போர் முடிந்து...

2009 மே 18 ஆம் திகதியன்று இலங்கையின் உள்ளகப் போர் நிறைவடைந்து, முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் பெருமளவான பொது மக்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டு 15 வருடங்கள் கடந்து விட்ட நிலையில், இந்த நினைவு தினத்தை முன்னிட்டு சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னஸ் கலமார்ட் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்தி விட்டு அங்கு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் மூன்று தசாப்த காலமாக நிலவிய ஆயுதம் தாங்கிய உள்ளகப் போரில் பாதிக்கப்பட்ட பலருக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்ப தற்கு தவறிய இலங்கைய அதிகாரத் தரப்புகள் மற்றும் சர்வதேச சமூகத்தின் இணைந்த கவனயீனமான செயற்பாட்டை இன்றைய வருட பூர்த்தி நினைவூட்டுகின்றது.

15 வருடங்களுக்கு முன்னர் யுத்தத்தின் இறுதி நாட்களில் உயிரிழந்த பெருமளவான அப்பாவி பொது மக்கள் உயிர் நீத்த பகுதியில் இன்று நாம் மிகவும் துயரத்துடன் நிற்கின்றோம்.

இந்த நிகழ்வுக்கு முன்னதாக, யுத்தத்தின் போது தாம் இழந்தவர்களை நினைவுகூரும் வகையில் தமிழ் சமூகத்தார் முன்னெடுத்திருந்த முயற்சிகளை தடுக்கும் வகையில் கைதுகள், பலவந்தமாக தடுத்து வைப்புகள் மற்றும் வேண்டுமென்றே தவறான கருத்துகளை பரப்பியிருந்தமை போன்ற நினைவு கூரலை தடுக்கும் வகையிலான சம்பவங்களை நாம் அவதானித்திருந்தோம்.

உயிர்நீத்தவர்களை நினைவு கூரவும், தமது அன்புக்குரியவர்களுக்காக அமைதியான முறையில் ஒன்றுகூடி தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதற்குமான உரிமைக்கு அதிகாரத்தரப்பினர் மதிப்பளிக்க வேண்டும்.

யுத்தத்தில் இரு தரப்புகளிலிருந்தும் சர்வதேச சட்டங்களுக்கமையவும், சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனித்நேய சட்டங்களை மீறும் வகையிலான குற்றங்கள் புரியப்பட் டுள்ளமை தொடர்பில் போதியளவு ஆதாரங்கள் காணப்படுகின்றமையை ஐக்கிய நாடுகளின் விசாரணைகள் இனங் கண்டுள்ள போதிலும், அவ்வாறான பாரதூரமான குற்றங்கள் தொடர்பில் பக்கசார்பற்ற அல்லது சுயாதீனமான தேசிய விசாரணைகளை முன்னெடுப்பது தொடர்பில் எவ்விதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

அத்துடன், யுத்தத்தின் போது வலிந்து காணாமலாக்கப்பட்ட குடும்பங்களின் எஞ்சியுள்ள அங்கத்தவர்கள், தமது அன்புக்குரியவர்களை தொடர்ந் தும் தேடிய வண்ணமுள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் தமக்கான நீதியை நீண்டகாலமாக தேடுவதை அவர்களிடமிருந்து அறிந்து கொள்வது மிகவும் மன உளைச்சலை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு பதிலளிப்பதற்கு இலங்கை அரசாங்கம் சிறந்த தீர்வாக அமைந்திருந்த போதிலும், கடந்த 15 வருட காலப்பகுதியில் பொறுப்புக் கூரலுக்காக உள்ளகக் கட்ட மைப்பை நிறுவுவதற்காக மேற்கொள் ளப்பட்ட பல்வேறு முயற்சிகள் வெறும் கண்துடைப்புகளாகவே அமைந்திருந்தன.

இந்த வாரத்தின் முற்பகுதியில் ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகரினால் வெளியிடப்பட்ட அறிக்கையிலும், இலங்கையின் பொறுப்புக்கூரல் செயற்பாடுகளில் காணப்படும் இடைவெளிகள் காரணமாக, இந்த விடயம் தொடர்பான கறைகள் மாறாமல் காணப்படுவதை வலியுறுத்தியிருந்தது.

உண்மை, நீதி மற்றும் இழப்பீடு போன்றவற்றுக்காக இன்றும் ஆயிரக்கணக்கான பாதிக்கப்பட்டவர்கள் காத்திருக்கின்றனர். இன்று முள்ளிவாய்க்காலில் நாம் அவர்களுடன் உறுதியாக கைகோர்த்துள்ளோம்-என்றார். (அ)

## கிளிநொச்சி...

டிப்போ சந்தியில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள யுத்த வெற்றி நினைவுச்சின்னம் அமைந்துள்ள பகுதியில் இராணுவத்தினரால் சிறுவர் பூங்கா அமைக்கப்படும் நிலையில் குறித்த எதிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் போராட்டத்துக்கான காரணத்தை கேட்டு அமைதிப்படுத்த முனைந்தனர். இதன்போது அமைதியின்மை ஏற்பட்டது.

தொடர்ந்து, வீதி போக்குவரத்துக்கு இடமளித்து போராட்டம் செய்ய பொலிஸாரால் அனுமதிக்கப்பட்டது. போராட்டக்காரர்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள குறித்த பகுதியை சுற்றி போராட்டத்தில் ஈடுபட்டதுடன், பிரதான வாயிலை மறித்து அமர்ந்தவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

டிப்போ சந்தியில் இராணுவ வெற்றி சின்னம் அமைந்துள்ள வளாகத்தில் சிறுவர் பூங்கா இராணுவத்தினரால் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இறுதிப்போரில்...

இந்த நினைவேந்தல் நிகழ்வில் சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னஸ் கலமார்ட் கலந்து கொண்டதோடு முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

மணி ஒலி எழுப்பப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பினால் நினைவுப் பேருரை ஆற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் யுத்தத்திலே கணவனை இழந்த முள்ளியவளையைச் சேர்ந்த கோவிந்தராசன் புனிதவதி பொதுச்சுடரினை ஏற்றி வைக்க ஏனைய உறவுகளும் தங்களுடைய உயிரிழந்த உறவுகளை நினைத்து சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்கு மதத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், பொது மக்கள், சமூகச் செயல்பாட்டா ளர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் தொடர்ச்சியாக மலர் அஞ்சலி செலுத்தினர்.

(எ)

## போர்...

சனிக்கிழமையுடன் 15 ஆண்டுகள் பூர்த்தியாகின. இதனை முன்னிட்டு விசேட அறிக்கையை வெளியிட்டு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

போர் என்பது வெற்றியல்ல,அது நாடு அல்லது மனித குலத்துக்கு பாரிய தோல்வியாகும். 30 வருடகால இன போராட்டம் காரணமாக நாடு பலவற்றை இழந்தது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தாய்மார் தங்களின் பிள்ளைகளை இழந்தனர். அதேபோல் பிள்ளைகள் தமது பெற்றோரை இழந்தனர்.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என இன அடிப்படையில் நாம் பிளவடைந்துள்ளோம். இந்த யுத்தத்தின் காரணமாக நான் எனது கண்ணை இழந்தேன்.மேலும் பல இழப்புக்களை எதிர்கொண்டேன். இறுதி யுத்தத்தின் முடிவை நினைவு கூறும் இன்றைய தினத்தில் வெறுப்புக்கு பதிலாக அன்பை பகிர்வோம்.

பழிவாங்குவதற்கு பதிலாக மன்னிக்கவும்,மனங்களில் பிசாசுகளுக்கு பதிலாக கடவுளை நிலைப்படுத்தவும் ஒருவருக்கொருவர் ஆறுதலை பரிமாற்றிக் கொள்ளவும் இன்றைய தினத்தில் உறுதியளிப்போம்-என்றுள்ளது.(அ)

## தமிழர்களுக்கு...

இலங்கையின் உள்நாட்டுப் போரின் இறுதித் தருணங்களில் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களையும் இடம் பெற்ற பரந்துபட்ட மனித உரிமை மீறல்களையும் நாங்கள் இன்றும் நினைவுகூருகின்றோம் என டிஜிற்றல் கலாசாரம், ஊடகம், விளையாட்டு நிழல் அமைச்சர் தங்கம் டெபனயர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இன்று எனது சிந்தனைகள், தாங்கள் எதிர்கொண்ட அநீதிகள் காரணமாக தொடர்ந்தும் வேதனையுடன் வாழும் பாதிக்கப்பட்டவர்கள், உயிர்பிழைத்தவர்கள், அவர்களின் அன்புக்குரியவர்கள் குறித்து காணப்படுகின்றது.

மே 18 என்பது எப்படி இழந்தவர்களை நினைகூரும் நாளோ அதே போன்று குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் நாள்.

யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்துவது தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவது, ஆராய்வதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார். (எ)

## தமிழர்களின்...

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு (வடக்கு - கிழக்கு) ஏற்பாட்டில் நேற்று நடத்தப் பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வின்போது, தமிழினப் படுகொலை முள்ளிவாய்க்காலில் உச்சந்தொட்டு 15 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் வெளியிடப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் பிரகடனத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழர்...

கடந்தகால மீறல்கள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்துமாறும் வலியுறுத்துகின்றது.

வட்டுக்கோட்டை தீர்மானத்தை ஏற்று, தமிழ் தேசத்தின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியமை, 1983 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பிற்கான 6 ஆவது திருத்தத்தின் ஊடாக தமிழ் மக்கள் தமது சுதந்திரத்திற்காக வாதிடும் திறன் மட்டுப்படுத்தப்பட்டமை, 1987 இல் அரசியலமைப்பிற்கான 13 ஆவது திருத்தம் அறிமுகப்படுத்தப் பட்டமை உள்ளடங்கலாக தமிழர்களின் அரசியல் போக்கை நிர்ணயித்த முக்கிய வரலாற்று நிகழ்வுகளும் குறித்த தீர்மானத்தில் கோடிட்டு காட்டப்பட்டுள்ளன.

யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப் பட்டு 15 ஆண்டுகள் நிறைவடைந்த போதிலும், தமிழர் தாயகப் பகுதிகளில் பெரும்பாலானவை இராணுவமயமாக்கப்பட்டுள்ளதுடன், பொறுப்புக்கூறல் நீதி மற்றும் அரசியல் தீர்வு ஆகிய விடயங்க ளில் இன்னும் குறிப்பிடத்தக்களவிலான முன்னேற்றம் எட்டப்படவில்லை என அந்த தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், தமிழர்களுக்கு எதிரான கடந்தகால மீறல்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதற்குரிய போதிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை எனவும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுடனான இராஜதந்திர தொடர்புகளை வலுப்படுத்துவதுடன் இந்திய பசுபிக் மற்றும் தெற்காசிய பிராந்தியத்தின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை என்பவற்றை முன்னிறுத்தி, அமெரிக்கா அவர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழர்களின் அரசியல் உரிமைகளை பாதுகாக்கவும், அவற்றுக்காக வாதிடவும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப் பட்ட பொதுஜன வாக்கெடுப்பொன்றை அமெ ரிக்கா நடத்த வேண்டும் எனவும் குறித்த தீர்மானத்தில் பிரதானமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## போரில்...

செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வு நேற்று காலை 9.30 மணிக்கு வெள்ளவத்தை ரயில் நிலையத்துக்கு அண்மையிலுள்ள கடற்கரையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களான ஷ்ரீன் ஸரூர், சுவஸ்திகா அருலிங்கம், சந்தியா எக்னெலிகொட, ராஜ்குமார் ரஜீவ்காந்த், கௌதமன், ரத்னவேல், நுவன் போபகே உள்ளிட்ட பலரும், கத்தோலிக்க மதகுருமாரும், பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

கடந்த வருடம் கொழும்பில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் "சிங்கள ராவய" அமைப்பினரால் குழப்பம் விளைவிக்கப்பட்டிருந்த நிலையில், இம்முறையும் பிற தரப்பினரால் இடையூறு ஏற்படுத்தப்படக்கூடும் என்ற சந்தேகம் நிலவியது. அதன்படி, நினைவேந்தல் நிகழ்வு நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த கடற்கரைப் பகுதிக்கு அண்மையில் காலையிலேயே பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

அதனையடுத்து 9.30 மணியளவில் அங்கு கூடியிருந்த அனைவரும் ஈகச்சுடரேற்றி, அதில் வெண்ணிற மலர்தூவி போரில் உயிர்நீத்தவர்களை நினைவு கூர்ந்தனர். இந்நினைவுகூரல் இடம்பெற்றுக் கொண்டிருந்த தருணத்தில், பிறிதொரு குழுவொன்று கொடிகளை ஏந்தி கூச்ச லிட்டவாறு கடற்கரைப்பகுதிக்குள் உட் பிரவேசித்து நினைவேந்தல் நிகழ்வுக்கு இடையூறு விளைவிக்க முற்பட்ட வேளையில், அங்கு குவிக்கப்பட்டிருந்த பொலிஸாரால் அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து நிகழ்வை விரைவாக முடித்துக்கொண்டு அங்கிருந்து அனைவரையும் வெளியேறுமாறும், தாமதமேற்படின் அதன் பின்னர் நிகழக்கூடியவற்றுக்குத் தம்மால் பொறுப்புக் கூறமுடியாது எனவும் பொலிஸ் அதிகாரியொருவர் சட்டத்தரணி ரத்னவேலிடம் எச்சரித்தார்.

இக்குழப்பங்களுக்கு மத்தியில் நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றிய சிவில் சமூக செயற்பாட்டாளர்களான சந்தியா எக்னெலிகொட, மிலானி மற்றும் ராஜ்குமார் ரஜீவ்காந்த் ஆகியோர் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 15 வருடங்கள் கடந்திருக்கும் நிலையில், போரில் உயிர்நீத்தவர்களை நினைவு கூரவேண்டியதன் தேவைப்பாட்டையும், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதி செய்யப்படவேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டிப் பேசினர்.

## கிழக்கு...

உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் நேற்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில், அங்கு வந்த பொலிஸார் நினைவேந்தலில் கலந்து கொண்ட மாணவர்களை அச்சுறுத்தியதுடன், அங்கு கட்டப்பட்டிருந்த கொடிகளையும் அறுத்துச் சென்றனர்.

எனினும், பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ச்சியாக முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தவேளை, மீண்டும் அவ்வி டத்துக்கு சென்ற ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர், அங்கிருந்த பதாதைகளை அகற்றியதுடன், இங்கு சுடர் ஏற்றவேண்டாம் என்று கூறியும், அங்கிருந்தவர்களை புகைப்படம் எடுத்தும் அச்சுறுத்தியுள்ளனர்.

அத்தோடு, அங்கிருந்த ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்தும் வகையில், கையடக்க தொலைபேசிகளில் சீருடை அணிந்திராத பொலிஸார் வீடியோ எடுத்து அச்சுறுத்தியுள்ளனர்.


பொலிஸாரின் அச்சுறுத்தல், அடாவடித்தனத்துக்கு மத்தியிலும் மாணவர்கள் சுடர்களை ஏற்றி மலர் அஞ்சலி செலுத்தவிருந்தவேளை அதையும் தடுத்துள்ளனர்.

பின்னர், அந்த இடத்தை விட்டு அகன்று பல்கலைக்கழகத்தினுள்ளே செல்லுமாறும், செல்லாவிட்டால் கைது செய்வோம் என்றும் மாணவர்களை பொலிஸார் மிரட்டியுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# நீதிமன்று தடையுத்தரவு விதித்த இடத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு



கல்முனை, மே 19

**பொலிஸார் தாக்கல் செய்த முறைப்பாட்டின்பேரில் நீதிமன்றம் தடைவிதித்த பாண்டிருப்பில் நேற்றுச் சனிக்கிழமை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நடந்தது.**

பெரிய நீலாவணை பொலிஸாரின் மனுவை ஏற்று கல்முனை நீதிவான் நீதிமன்றம் இந்தத் தடையுத்தரவைப் பிறப்பித்திருந்தது.

அந்தத் தடையுத்தரவுக்கு எதிராக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், மற்றும் காரைதீவு விநாயகம் விமலநாதன் ஆகியோர் நகர்த்தல் மனுவை சட்டத்தரணிகளூடாக சமர்ப்பித்தன் பேரில் நீதிமன்றம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தடையுத்தரவை விலக்கிக் கொண்டது.

இதனையடுத்து பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயம் முன்றிலில் நேற்றுச் சனிக்கிழமை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இணைப்பாளர் துஷாந்தன் ஏற்பாட்டில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. அத்தோடு முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது. இதேவேளை, ஆலய வளாகத்தில் அதிகளவான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். (எ)

## மரத்திலிருந்து விழுந்த இளைஞன் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மே. 19

உடுவில் பகுதியில் மரத்திலிருந்து தவறிவிழுந்த இளைஞன் ஒருவர் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இதில் ஆலடி உடுவில் மானிப்பாயைச் சேர்ந்த சசிக்குமார் ரூபின்சன் (வயது-20) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் கடந்த 12ஆம் திகதி மாங்கனிகளை பறிப்பதற்காக மாமரமொன்றில் ஏறிய நிலையில் தவறி விழுந்ததில் சுயநினைவை இழந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரணவிசாரணை அதிகாரி ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற் கூற்றுப் பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ)

## நந்திக்கடலில் அஞ்சலி



முல்லைத்தீவு, மே. 19

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் 15ஆம் ஆண்டு நினைவுநாள் இன்றாகும். அந்தவகையில் முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு, முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று சனிக்கிழமை நந்திக்கடலில் மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.

இந்த அஞ்சலி நிகழ்வுகளில் முன்னாள் கரைதுறைப் பற்று பிரதேசசபை உறுப்பினர் இ.ஜெகதீசன், சமூக செயல்பாட்டாளர் அ.பீற்றர் இளஞ்செழியன் ஆகியோரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 5 கோடி ரூபா பெறுமதியான அப்பிள் ரக கைத்தொலைபேசிகளுடன் இருவர் கைது!

கொழும்பு, மே. 19

டுபாயில் இருந்து சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட 5 கோடி ரூபாய் பெறுமதியான நவீன அப்பிள் ரக கையடக்க தொலைபேசிகளுடன் இரண்டு பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். கட்டுநாயக்க விமான நிலைய குற்றப்புலனாய்வு திணைக்கள பிரிவினால் குறித்த இருவரும் கைதாகினர்.

கைதானவர்கள் கொழும்பைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த இருவரும் உரிய தீர்வையை செலுத்தாது 1,083 நவீன அப்பிள் ரக கையடக்க தொலைபேசிகளை நாட்டுக்கு கொண்டு வந்துள்ளனர். (அ)

# ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் இலங்கை வருகை!



கொழும்பு, மே. 19

பிரதமர் தினேஷ் குணவர்தனவின் அழைப்பின் பேரில் ஆன்மீக குரு வாழும் கலை பயிற்சி நிலையத்தின் ஸ்தாபகர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் நேற்று சனிக்கிழமை நாட்டுக்கு வருகை தந்துள்ளார்.

அவரை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் விமான நிலையத்தில் வரவேற்றுள்ளார்.

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நுவரெலியா சீதாஎலிய ஸ்ரீ சீதையம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ள மஹா கும்பாபிஷேக பெருவிழாவில் கலந்து கொள்ளவுள்ளார்.

அதனை தொடர்ந்து, நாளை மாலை 5.15 மணிக்கு கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெறும் சத்சங்கத்தில் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.

அந்நிகழ்வில், நாடளாவிய ரீதியில் வாழும் கலையின் 12 திறன் மேம்பாட்டு மையங்களை திறந்து வைக்கவுள்ளார்.

தொடர்ந்து, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் அழைப்புக்கிணங்க, திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு திருகோணமலை உட்துறைமுக வீதியிலுள்ள இந்து கலாசார மண்டபத்துக்கு விஜயம் செய்யவுள்ளார். அங்கு ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கரை கௌரவிக்கும் வகையில் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

## கலா ஓயா பாலம் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியது



புத்தளம், மே 19

புத்தளம், எலுவாங்குளம் பகுதியில் கலா ஓயா பாலம் முற்றாக நீரில் மூழ்கியுள்ளமையால் குறித்த பகுதிக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு புத்தளம் மாவட்ட இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையால் புத்தளம் எலுவாங்குளம் பகுதியின் கலா ஓயா பாலம் முற்றாக நீரில் மூழ்கியுள்ளது.

இதனால் வில்பத்து சரணாலயத்துக்குச் செல்லும் பாதை மூடப்பட்டுள்ளது. அத்துடன் சுற்றுலாப் பயணிகள் வில்பத்து சரணாலயத்துக்கு குறித்த பகுதியினூடாக செல்ல வேண்டாமென்று வனஜீவராசிகள் திணைக்களத்தினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் குறித்த பகுதியில் பொதுமக்கள் குளிப்பதைத் தவிர்க்குமாறு இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (எ)

## இரண்டு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்து! 26 பேர் காயம்

கேகாலை, மே 19

கேகாலை - அவிசாவளை வீதியில் கொட்டபொல பிரதேசத்தில் இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்றுச் சனிக்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

கண்டியிலிருந்து அவிசாவளை நோக்கிப் பயணித்த தனியார் பேருந்தும் அதிக வேகத்துடன் பயணித்தமையாலும் கவனக்குறைவாக பிறிதொரு வாகனத்தை முந்திச் செல்ல முயன்றமையாலும் இந்த விபத்து இடம் பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த விபத்தின் போது 26 பேர் காயமடைந்த நிலையில் கேகாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் பேருந்துச் சாரதி மற்றும் பெண்ணொருவரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ)

## 13, 752 கஞ்சா செடிகளுடன் பொலிஸாரால் ஒருவர் கைது

ஹம்பேகமுவ, மே 19

ஹம்பேகமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பலுப்பிட்டிகன்த பிரதேசத்தில் 13, 752 கஞ்சா செடிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலம்பகேயார பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயது நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் சந்தேக நபரிடமிருந்து 13,752 கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹம்பேகமுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.